விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 28 ஞாயிற்றுக்கிழமை (10.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 112

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது | பாதுகாப்பானது | நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# எஸ்.பியை விடுவிக்க போராட்டங்களை

# தொடர்ந்து நடத்துவதா? விடுவதா?

## தர்மசங்கட நிலையில் ஐ.தே.கட்சி அரசியல் உயர்பீடத்தில் கடும் விவாதம்

(கொழும்பு)

இரண்டுவருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி மேற்கொண்டு வருகின்ற சத்தியாக்கிரகங்களையும், போராட்டங்களையும் கைவிடுவதற்கு ஐ.தே.க தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை இன்றுமுதல் ரூ. 20

(யாழ்ப்பாணம்)

ஒரு இறாத்தல் பாணின் விலை 20 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்றுமுதல் அமுலுக்குவரும் வகையில் இவ்விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தொடர்ந்து ஒரு இறாத்தல் பாண் 22 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் ஜனாதிபதி

(கொழும்பு)



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் காலை தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் பயணமானார்.

இவரின் விஜயத்திற்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. ஜனாதிபதி சில தினங்கள் அங்கு தங்கியிருப்பார் எனத் தெரியவருகிறது. (த-03)

## தலைவர் பிரபாவுடன் பேச்சு நடத்த புனர்வாழ்வு அமைச்சர் கடிதம்

### ஐ.நா. தூதரகம் ஊடாக அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிசாத் பதியூதீன், தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதம் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை தூதுவராலயத்தின் ஊடாக நேற்றைய தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் பலதரப்பட்ட விடயங்கள் பற்றி ஆராய விரும்புவதாகவும், அதன்பொருட்டு தங்களைச் சந்தித்துப்பேச நேரம் ஒதுக்கித் தருமாறும் ரிசாத் பதியுதீன் அக்கடிதத்தில் கோரியுள்ளார். (த)

## இராணுவ சீருடை அணிந்த மூவர் தாக்குதல் குழுவில் இருந்தனர்

### பணயம் வைக்கப்பட்ட வேட்டைக்காரர்கள் தகவல்

(திருகோணமலை)

திருகோணமலை பூநகர் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதல் நடாத்தியவர்களில் மூவர் சிங்களவர் என்பது அவர்களினால் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட வேட்டைக்காரர்கள் மூலம் தெரியவந்துள்ளது.

பூநகர் பகுதியிலிருந்து காட்டுக்கு வேட்டைக்கு சென்ற இருவர் கடந்த வியாழன் ஆயுததாரிகளினால் காட்டில் வைத்து பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மஹிந்தபுர இராணுவ முகாமுக்குப் பின்புறமாக ஆயுததாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இரவு வரை தம்மை தடுத்து வைத்த அவர்கள் இரவு 8.30 மணியளவில் நகர்ந்து விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்துக்கு பின்புறமாகச் சென்று நிலையெடுத்து இருந்தனர் பின்னர் அதிகாலையில் எம்மைப் போகும்படி கூறிவிட்டு விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர் என வேட்டைக்காரர்கள் தெரிவித்தனர்.


இந்த தாக்குதல் குழுவில் 9 பேர் இருந்தனர் அவர்களுள் மூவர் இராணுவச் சீருடையில் சிங்கள மொழியில் உரையாடினர் 6 பேர்

# ரணில்-மன்மோகன் புதுடில்லியில் சந்திப்பு

# இருதரப்பு விடயங்கள் குறித்தும் ஆராய்வு

(புதுடில்லி)

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு டோக்கியோ பிரகடனத்துக்கு அமைய அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் எதிர்க்கட்சி என்றும் பாராமல் ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என





கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லிக்குப் பயணம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே இதனை தெரிவித்ததாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறைசேரியின் முன்னாள் செயலாளரும் தூதரக அதிகாரியுமான ஜெயலத்தவின் ஞாபகார்த்தமாக புதுடில்லியில் நடைபெறும் ஞாபகார்த்த வைபவங்களில் கலந்து கொள்ளுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இந்தியா சென்றுள்ளார்.

இந்த வைபவம் முடிவடைந்த பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை புதுடில்லியில் அவர் சந்தித்துப் கலந்துரையாடினார். இந்தச்சந்திப்பின் போது இலங்கை, இந்தியா இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தின் போது இலங்கைக்கும் தென் இந்தியாவுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் அதன் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியப் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை எவ் வகையான சூழ்நிலையிலும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்துவருவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாக அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4-ற)

## இராணுவச் சிப்பாய் புலிகளால் கைது

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள மூதூர் கிழக்குத் தங்கபுரத்தில் உளவுபார்க்கும் வேலையில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

சாதாரண உடையில் இருந்தனர் என அவர்கள் தெரிவித்தனர். இவர்களை கண்காணிப்புக் குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்க ஏற்பாடாகியிருந்தும்கூட அது நடைபெறவில்லை நேற்று முன்தினம் அதிகாலை புலிகளின் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தும் மற்றொருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

(த-08)

## ஜே.வி.பி. எம்.பி கைதாகி விடுதலை

(திருகோணமலை)

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த வீரசேகர நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டெங்கு நோய் தொடர்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலை பேரவை எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றுவது துணைவேந்தரின் கடமை

## எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் பதவி குறித்து இடம்பெற்று வரும் இழுபறிகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுப்புத் தொடர்பிலான பதிவாளர் முறைகேடு, மோசடி எனப் பல முனைகளிலும் குற்றம்சாட்டப்பட்டு, பல்வேறு தரப்பினரதும் கோரிக்கையின் பேரில் பல்கலைக்கழக பேரவை இது விடயத்தில் விசாரணை செய்து நீதியான தீர்ப்பை வழங்க வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ் விடயம் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கேற்ப பல்கலைக்கழக பேரவை ஒரு விசாரணைக்குழுவை நியமித்து விசாரணை நடத்தப்பட்டு விசாரணை முடிவில் பதிவாளரை மீள் நியமனம் செய்வதான தீர்மானம் எதிர்ப்பின் மத்தியிலும் பேரவையால் நிறைவேற்றப்பட்டதாக அறிகின்றோம்.

எனவே பேரவையால் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தைச் செயற்படுத்த வேண்டியது துணைவேந்தரின் தார்மீகக் கடமையாகும். அத்துடன் பேரவையின் செயற்பாட்டில் நம்பிக்கை வைத்து பேரவையின் விசாரணைக்காக - தீர்ப்புக்காக இதை சமர்ப்பித்தவர்கள் பேரவையின் தீர்ப்பினையும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவர்களினதும் தார்மீகக் கடமையாகும்.

அதைவிடுத்து ஓரிருவரின் அல்லது ஒரு சாராரின் வேண்டுகோளுக்காக பேரவையின் தீர்மானத்தைப் பின்தள்ளுவது இழுத்தடிப்பது அல்லது இரத்துச் செய்வது நியாயமற்ற ஒன்றாகக் கருத ஏதுவாவதுடன் பேரவையின் அதிகாரத்திலும் வலுவிலும் ஆளுமையிலும் சந்தேகம் ஏற்படுவதற்கும் காரணமாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்றுள்ளது. (த)

# திருமணத்தில் செஞ்சரி அடிக்கும் ஆசை நிறைவேறாமல் மரணமான முதியவர்

91 பெண்களை மணந்த 84 வயது முதியோர் ஒருவர் 100 பெண்களை மணக்கும் தனது ஆசை நிறைவேறாமலேயே மரணமானார்.

ஒரிசா மாநிலம், கியோன்கர் மாவட்டம் ஒரலி கிராமத்தைச் சேர்ந்தவர் உதயானந்த் தட்சிணராய் மிராசுதாஸ் 550 ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரர்.

கொல்கத்தாவில் படித்துக் கொண்டிருந்தபோது இவருக்கு முதல். திருமணம் நடந்தது.

அந்தத் திருமணம் முறிந்து விட்டது. இதனால் "வாழ்நாளில் 100 பெண்களை மணக்கப்போவதாக" உதயானந்த் சபதம் செய்தார்.

இதன்படி அவர் 91 பெண்களைத் திருமணம் செய்து வாழ்க்கையை நடத்தினார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு உதயானந்த் ஒரு விபத்தில் சிக்கினார். இதைத் தொடர்ந்து அவர் பக்கவாத நோயால் அவதிப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை அவரது உடல் நிலை மோசமடைந்தது. அன்று அவர் மரணம் அடைந்தார்.

அவரது உயிர் பிரிந்தபோது அவரது மனைவிகளும் குழந்தைகளும் அருகில் இருந்தனர். மரணமடைந்தபோது உதயானந்துக்கு 84 வயது 100 பெண்களை மணந்து செஞ்சரி அடிக்கவேண்டும் என்ற அவரது ஆசை நிறைவேறாமல் போய்விட்டது.

அவருடைய ஒரு மனைவி கூறுகையில், எனது கணவர் திருமணம் செய்யும்படி எந்தப் பெண்ணையும் வற்புறுத்தியதில்லை. சம்மதத்தின் பேரில் தான் அனைத்துப் பெண்களையும் திருமணம் செய்தார் என்று தெரிவித்தார்.(ற-9)

# அதிகாரிகளின் அலட்சியம் ஓய்வூதியர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியப் பணிகளை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிப்பதால் பல ஓய்வூதியர்கள் கடந்தகால கொடுப்பனவுகள் பெறமுடியாதுள்ளதாக பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பிரதேசத்திற்கு தனியான பிரதேச செயலகம் அமைக்கப்பட்டு இரு வருடங்கள் கடந்த நிலையிலும் ஓய்வூதியப் பணிகள் விரிவாக உரிய காலத்தில் நடைபெறாததால் வயோதிப நிலையில் ஓய்வூதியர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக நீண்ட நாட்கள் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிதிக்கு பொறுப்பான அல்லது ஓய்வூதிய பகுதிக்கு பொறுப்பான அதிகாரியை சந்தித்து தொடர்புகொண்ட போதிலும் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறி தம்மை அலைக்கழித்து வருவதாகப் பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து நாங்களும் கடந்த காலத்தில் ஒரு அரச உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய பின்னரே ஓய்வூதியம் பெற்றுள்ளோம் என்ற மதிப்புடன் செயற்படாமல் காலம் தாழ்த்துவது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விசனமடைந்துள்ளனர்.

(து-246)

# அகதி முகாம்களில் புத்தாண்டு விழா கொண்டாடும் நிலையில் சுனாமி அகதிகள்

## அரசாங்கத்தை சாடுகிறது ஐ.தே.க.

அரசின் அசமந்தப் போக்கால் சுனாமியால் பாதிப்புற்ற மக்கள் தமிழ், சிங்கள புத்தாண்டை நலன்புரி முகாம்களிலேயே கொண்டாட வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை 3 மாதத்திற்குள் அமைத்துக் கொடுப்பதாக அரசாங்கம் கூறியபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் காரணமாக வீடுகள் மற்றும் காணிகளை இழந்த அநேகமானோர் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

சுனாமிப் பேரலையால் உறவுகளை இழந்தும் பிரிந்தும் உடைமைகளை பறிகொடுத்தும் வாழும் மக்கள் இன்னும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பவில்லை.

சுனாமிப் பேரலை ஏற்பட்டு 3 மாதங்களாகியும் இதுவரை அரசு மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கவில்லை.

வெளிநாடுகள் வழங்கிய உதவிகள் பற்றியும் இதுவரை அரசு எந்தவித தகவலையும் வெளியிடவில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவோ வெளிநாடுகளிடமிருந்து 5 சதம்கூட கிடைக்கவில்லை எனக் கூறுகிறார்.

உதவிய நாடுகள் இலங்கைக்கு வழங்கிய உதவிகள் குறித்து அறிக்கை விடுகின்றன. இவற்றை எல்லாம் அவதானிக்கும்போது அரசினால் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றார்கள் என்றே கூறவேண்டும் என்றார்.(க-9)




விநாயகர் துணை – ஓம் விராட் விஸ்வ பிரமனே நமக

நாவற்குழி கிழக்கு

காதவாய்க்கால் தெருவழிப் பிள்ளையார் கோவில்

10.04.2005 மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் ஞாயிறு

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மை தரு செய்யதமிழ் பார்திசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால் வாய்
ஆனைமுகனைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்

(பங்குனி 28ஆம் நாள்) 10.04.2005 ஞாயிற்றுக் கிழமை காலை 9.50 மணிமுதல் 11.10 மணிவரை யுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்

கும்பாபிஷேகம்

இடம்பெறும். தொடர்ந்து மகா அபிஷேகமும் மாலை வசந்தமண்டப பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

குறிப்பு: 10.04.2005 பகல் 1 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

ஐங்கரன் அடியார்களே,

சமய குரவர்களினால் விதந்து கூறப்பட்டதும், இந்து சமுத்திரத்தின் நித்திலமாக விளங்குவதும் திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்டதுமான எமது நாட்டின் வடபால் யாழ்ப்பாண நகரில் சைவமரபு தழைத்தோங்குவதும், குளங்களும் நன்செய் வயல்களும் வரையாது வழங்கும் வள்ளல்கள் பலரால் சிறப்புற்றோங்குவதுமான நாவற்குழியின் கிழக்கே காதவாய்க்கால் அருகில் கோயில்கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் தாரண வருடம் பங்குனித் திங்கள் 28 ஆம் நாள் (10.04.2005) ஞாயிற்றுக்கிழமையும் துதியை திதியும், அஸ்வினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.50 மணிமுதல் 11.10 மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அவ்வேளையில் அடியார்கள் ஆலயம் வருகைதந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெறுவீர்களாக.

குருமார் விபரம்

சர்வபோதம்
சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள்
(நயினை நாகபூசணி அம்மன் பிரதமகுரு)

பிரதிஷ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ நா.ஹரீந்திரக் குருக்கள்
(நாவற்குழி)

சர்வசாதகம்
சிவஸ்ரீ சோ.சண்முகநாதக் குருக்கள்
(யாழ்ப்பாணம்)
சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள்
(புங்குடுதீவு)

ஏனைய குருமார்கள்
சிவஸ்ரீ சு.முரளிதரக் குருக்கள் (அரியாலை)
சிவஸ்ரீ சு.சிவசாமிக் குருக்கள் (யாழ்ப்பாணம்)
பிரம்மஸ்ரீ ஜெ.சிவகுமார சர்மா
பிரம்மஸ்ரீ ச.சங்கர் சர்மா
பிரம்மஸ்ரீ சு.ரவி சர்மா
பிரம்மஸ்ரீ லோகேஸ்வர சர்மா (அரியாலை)

ஆலய பூசகர் பிரம்மஸ்ரீ நா.கலாதரசர்மா
(J.P நாவற்குழி)

ஆசியுரை : நல்லை ஆதீன குருமகா சந்நிதான சுவாமிகள்

நன்றியுரை : போசகர் வீ.மகாலிங்கம்

10.04.2005 தொடக்கம் 21.04.2005 வரை மண்டலாபிஷேகம் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும்

அடியவர்கள் ஆலயம் வரும்போது பால், இளநீர், பூ, பூமாலை என்பவற்றை சமர்ப்பித்து விநாயகப்பெருமானின் அருளைப் பெறுவீர்களாக. நன்றி

குறிப்பு: 21.04.2005 வியாழன் பூர்த்தி தினத்தன்று அன்னதானம் நடைபெறும்

நாவற்குழி கிழக்கு, நாவற்குழி

இவ்வண்ணம்: ஆலய பரிபாலன சபை

(சி-1221)

# ஹங்கொடவல சோமதேரரின் மறைவின் உண்மையை உலகுக்கு வெளிப்படுத்துக!

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தம்மாலோக தேரர் கோரிக்கை

(கொழும்பு)

ஹங்கொடவல சோமதேரரின் மறைவு குறித்த உண்மையை உலகிற்கு வெளிப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினா உடுவே தம்மாலோக தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சோமதேரரின் மறைவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதியின் ஆணைக் குழு முன்பாக நேற்று முன்தினம் சாட்சியம் அளித்தபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சோமதேரரின் மறைவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முன்தினம் மீண்டும் கூடியது. ஹங்கொடவல சோமதேரரின் மறைவின் பின்னணியில் இரகசியம் பொதிந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

சோமதேரரின் மறைவு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நான் நேற்று முன்தினம் சாட்சியம் அளித்தேன்.

விசேடமாக சோமதேரரின் மறைவு தொடர்பில் இரகசியம இருக்கின்றன. இதில் உண்மை நிலையை ஆராய்ந்து சரியான தகவலை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு நான் எனது தெளிவான சாட்சியத்தை ஆணைக்குழுவிடம் தெரிவித்தேன்.

இந்த ஆணைக்குழுவிடம் கடந்த வருடம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டன. பொலிஸார் உரிய முறையில் தமது கடமைகளை நிறைவேற்ற வில்லையென்ற முறைப்பாடுகளே அதிக அளவு கிடைத்துள்ளதாக இந்த ஆணைக்குழு தெரிவித்தது என உடுவே தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்தார். (ரு-8)

# சுனாமியால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் தரவுகளை திரட்டுவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உளரீதியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டதும் குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களுக்கு கல்விப் போதனைகளுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென கல்வியமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது ஊனமுற்ற மாணவர்கள் கருத்தில் கொள்ளப்படுவர் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள மாணவர்கள் தொடர்பான விபரங்களை கல்வியமைச்சின் விசேட க்ல்விப் பிரிவுக்கு அறிவிக்குமாறு பொதுமக்களை அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (ரு-4)

# 143 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களை நிராந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படாதிருந்த 143 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்களை மாகாண கல்வியமைச்சு விரைவில் வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 857 பேருக்கான நியமனங்களை மாகாண கல்வியமைச்சு-2003 ஆம் ஆண்டு யூன் மாதம் வழங்கியுள்ளது.

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கஷ்ட அதி கஷ்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுவோர் நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அடுத்த வாரம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கோரவுள்ளதாக அதன் அதிகாரி தெரிவித்தார்.

எனவே தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் கடமையாற்றியோர் ஜனவரி மாதம் முதல் நிரந்தர சேவைக்கு சேர்ந்துக் கொள்ளப்படுவார்கள்.

இவர்கள் நிரந்தர சேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை ஏற்கனவே வழங்கியுள்ளது. (க-9)

# அரசாங்க ஊடாக நிறுவனங்கள் ஜூலையில் மறுசீரமைக்கப்படும்

(கொழும்பு)

அரச ஊடாக நிறுவனங்களின் மறுசீரமைப்புத் திட்டம் எதிர்வரும் யூலை மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இதில் அமைச்சர் மங்கள சமரவீர அரச ஊடகங்களின் மறு சீரமைப்புக்கென நியமித்த குழுவின் அங்கத்தவர்களை நேற்று முன்தினம் சந்தித்தபோது மறுசீரமைப்புக்கான சிபார்சுகளை தமக்கு தருமாறு கேட்டுள்ளார்.

நடவடிக்கை குழுவினால் நியமிக்கப்பட்ட உபகுழுக்கள் ஊடாக நிறுவனங்களின் தலைவர்களையும் பணிப்பாளர்களையும் அடுத்த வாரம் சந்திக்கவிருக்கின்றனர்.

கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஊடாக கொள்கைக்கு அமைய, நவீன உத்திகளை அறிமுகம் செய்து ஊடகங்களை மறுசீரமைப்பதற்கான அறிக்கையில் தெரிவிக்கப்படும் சிபார்சுகளை அமைச்சர் அமுல் செய்யவிருக்கின்றார்.(க-9)

# நியாப் –11 திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு 25 கிராமங்கள் புனரமைக்கப்படும்

நியாப்-11 திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 25 கிராமங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. கொட்டைக்காடு, நாரந்தனை வடக்கு, பிட்டி எல்லை, நயினாதீவு தெற்கு, நெடுங்குளம், கோண்டாவில் வடகிழக்கு, நவாலி கிழக்கு, சில்லாலை வடக்கு, வட்டு தெற்கு, வண்ணபுரம், குப்பிளான் தெற்கு, சங்குவேலி, கல்லாரை, வாதரவத்தை, சிவபுரம், புத்தூர் கிழக்கு,

மணடுவில், கரம்பைக்குறிச்சி, குடம்பியன் கைதடி கிழக்கு வெள்ளாம் போக்கட்டி, கரணவாய் வடக்கு, சமரபாகு (கரவெட்டி) கெருடாவில் தெற்கு மற்றும் செம்பியன்பற்று ஆகிய கிராமங்களே இத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக மேற்படி கிராமங்களில் சமூக வலூவூட்டாளர்கள் அடிப்படைத் தரவுகளைப் பெற்று தேவைப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு பிரதேச செயலாளர்கள் ரீதியாக அமைக்கப்பட்ட குழுக்கள் மூலம் இக் கிராமங்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளுக்கான ஆரம்பக்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இந் நியாப் -11 திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக வழுக்கையாறு 40 மில்லியன் ரூபா செலவிலும் மண்கும்பான் உவர்நீர்தடுப்பணை 8 மில்லியன் ரூபா செலவிலும் ஏனைய குளங்கள் 10 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-19)

# பூநாறி மரத்தடி வாகன விபத்து சாரதிக்கு பிணையில் செல்ல அனுமதி


(யாழ்ப்பாணம்)


கொக்குவில் பூநாறி மரத்தடியில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற மோட்டார் சைக்கள் - ஹண்டர் வாகன விபத்தில் இளம்பெண் ஒருவர் மரணமான சம்பவத்துடன் தொடர்புடைய ரெலிக்கொம் வாகனச் சாரதி அன்றைய தினமே யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இம் மாதம் 15 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.


மேற்குறித்த நபர் மறுதினம் ரூ 26 ஆயிரம் பெறுமதியான இரு ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ரெலிக்கொம் அதிகாரிகள் இருவர் பிணை நின்றார்கள். மேலும் விபத்துடன் சம்பந்தப்பட்ட ரெலிக்கொம் வாகனத்தை ரூ 2 இலட்சம் பிணை முறியில் மாவட்ட ரெலிக்கொம் பரிசோதகர் கையெழுத்திட்ட பின்னர் கொடுக்கும்படி பொலிஸாருக்கு கூறப்பட்டது. இவ் வழக்கு வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (19)

# எல்லாம் உங்களுக்காகவே....









நேற்று முன்தினம் வத்திக்கான் புனித பேதுரு தேவாலயத்தில் நடைபெற்ற பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி ஆராதனைகளின் போது...







# சிறப்புத் தேர்வுப் பட்டியல் மூலம் கலைப்பீடத்திற்குத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு 2004/2005 ஆம் கல்வி யாண்டில் முதலாம் வருடக் கற்கை நெறியை மேற்கொள்வதற்கு சிறப் புத்தேர்வுப் பட்டியல் மூலம் மேலும் 132 பேரின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப் பட்டோருக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி கலைப் பீடத்தில் ஆரம்பகமாவுள்ளன.

எனவே, அத் தினத்திற்கு முன் னர் இம் மாணவர்கள் அனை வரையும் பல்கலைக்கழகத்தில் பதி வுகளை மேற்கொள்ளுமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

இச் சிறப்புத் தேர்வுப பட்டிய லில் உள்ளடக்கப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு:-

ஏ.ரி.தர்மராஜா- கொச்சிக் கடை, எம்.என்.எப்.நசிறினா - பலாங் கொடை, ஏ.ஜே.எம்.ரிஷ்மியா - பலாங்கொடை, எஸ்.எம்.சாகீர் - நிக்கலரெட்டியா, எம்.கே.எவ். சில்மியா - சிகுணகொல, ஸ்ரீ.கே. ராணி -சிலாபம், எஸ்.மகேந்திரன் - சிலாபம், என்.ஸினாஸ்- கல் பிட்டி, எம்.ஏ.அனிஸா - கல்பிட்டி, ஆர்.சர்பானா - கலவேல, ஏ.டபிள்யு. எல்.சர்மிளா - அக்குரண; ஸ்ரீ.திலி குமார டிலிஷன் - பத்தான, எஸ்.உஷாநந்தினி - நனுஓயா, எச்.சி.எவ்.ரெளஷி - சாய்ந்தமருது, ஏஉவைஸ - சாய்ந்தமருது, வி.ஜீவ ராசா- துறைநீலாவனை, எம்.பிர் னாஸ் - கல்முனை, வி.நிஷா ந்தி - கல்முனை, ஏ.ஆர்.எம்.றிம் சான் - அட்டாளச்சேனை, ஏ.கவிதா, பி.சந்திரநிதா - முறக்கொட்டாஞ் சேனை, கே.நிரோஷினி -நுவ ரெலியா, எஸ்.கோகுலவாணி - மங்கையர்க்கரசியாள் இல்லம், வை.கமலினி - திருச்செந்தூர் வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, கே. சுரேஷ் - கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு, எஸ்.புவனேந்தி ரன் - கிரான்குளம், ஏ.பிரதீபன் -கிரான்குளம், எம்.குணலட்சுமி- கொக்கட்டிச்சோலை. வி.சுரேஷ் குமார் - செட்டிபாளையம், ஏ.தேவ ரூபன் - செட்டிபாளையம், கே.புவ கரன் - போரதீவு, எஸ்.மாதவன் - களுவாஞ்சிக்குடி, வி.நிருபமா - களுதாவளை, எஸ்.ஜெயப்பிரபா -தேத்தாத்தீவு, கே.வாவிகரன்- மட்டக்களப்பு. பி.பூலோகநாதன் - மட்டக்களப்பு, கே.சுதாகரன்- செட்டிபாளையம், கே.மேனகா- களுவாஞ்சிக்குடி, ஆர்.புவனா- களுவாஞ்சிக்குடி, ரி.ரஜனி - களு வாஞ்சிக்குடி, ஏ.மலர் விழி - கோவில் போரதீவு, ரி.மயூரதா - மட்டக்களப்பு, கே.ஜெயகாந்தன் - வெல்லாவெளி, பி.பவன் - துறை நீலாவணை, என்.நளினி - துறை நீலாவணை. ரி.பலாச்சந்திரன் - மட்டக்களப்பு, எம்.ரமேஷ் - கல் லாறு, கே.கஜிதா - வவுனியா, கனகரட்ணேஸ்வரன் - வவுனியா, ஆர்.சர்மிளா - வவுனியா, ரி.அனு சுஜா - யாழ்ப்பாணம், ஜெ.ஜெக தீபன் - வவுனியா, எம்.சிவரூபி - வவுனியா, எஸ்.விதீபா - முள்ளி யவளை, கே.ஆர்.சந்திரஹாசன் - அச்சுவேலி, ஆர்.விமலேஸ்வரன் - வவுனியா, ரி.கவிதா - மன் னார், ஜெ.இயலாமெரின் - மொன ராகலை, எம்.சுஜந்தி - வவு னியா, எஸ்.வனிதா - வவுனியா, வி.விஜயரூபினி - வவுனியா, பி.ஜீவனா - வவுனியா, ஆர்.சுதர் ஸன் - முல்லைத்தீவு, ரி.சுரேஷ் குமார் - புதுக்குடியிருப்பு, எம். டயானி - கிளிநொச்சி, பி.மனோ கரன் - மீசாலை, கே.துஷாந்தி - யாழ்ப்பாணம், ரி.காண்டீபன் - கிளிநொச்சி, எக்ஸ்.ஜே.சர்மிளா யாழ்ப்பாணம், ஏஸ்.காஞ்சனா யாழ்ப்பாணம். சு.சதீஸ்காந் - வேலணை, கு.மீரா -பிறவுண் வீதி, க.மயூரி - நல்லூர் வடக்கு, தே.சிந்துஜா - திருநெல்வேலி, பா.தர்ஷிகா - கந்தர்மடம், சி.சுறே ணுகா - யாழ்ப்பாணம், த.சுதர்சன் - வட்டுக்கோட்டை, உ.வதனராஜ - கோண்டாவில், த.அம்பாலிகா - மானிப்பாய் தெற்கு, ம.ஜுலியற் எமல்டா - நெடுந்தீவு, கு.கோபி நாத் - வேலணை வடக்கு, அ.லிங் கேசன் - வேலணை கிழக்கு, பா.சர் மிளா - நயினாதீவு; பி.பிரதீபன் - மட்டுவில் வடக்கு, கு.திவ் வியா - சாவகச்சேரி, த.தயாதேவி - மட்டுவில், த.அஜந்தன் - கொடி காமம், செ.சுபேதா -சாவகச்சேரி, இ.குணசீலன் - மானிப்பாய்தெற்கு, சி.லதீபன் - சங்குவேலி தெற்கு, பொ.சிவராசசிவம் - சுழிபுரம், ஏ.பத்மவினோதினி- மூளாய்தெற்கு, ச.நிதர்ஷன் - மானிப்பாய், வி.கிரு ஸ்ணகுமார் - மானிப்பாய், இ.கஜே ந்தினி - மடத்தடி, சண்டிலிப் பாய், அ.அஜிந்தன் - உடுவில், சி.சந்திரா -கந்தரோடை, மு.நிஷா ளினி- சுன்னாகம்தெற்கு, சி.லோ கேஸ்வரன் - யாழ்ப்பாணம், கு.சர் மினி -கோண்டாவில் வடக்கு, எஸ். சச்சிதானந்தன் -யாழ்ப்பாணம், த.அனுசன் - சண்டிலிப்பாய், க.சர் மினி - அளவெட்டிமேற்கு, ச.சிவ ரஞ்சன் -நாகம்மாள கோவில் வீதி, செ.சுரேஸ் -மல்லாகம், ஈ.மகிழீசன், சிவபூதவராயர் கோவி லடி, பி.ராகுலன் - சுன்னாகம், எஸ்.தமயந்தி - அளவெட்டி, எல்.பகீரா-புத்தூர், வி.கணேஷன் -யாழ்ப்பாணம், எஸ்.ஜீவனா - அச் சுவேலி, எம்.கார்த்திகன் - சாவ கச்சேரி, என்.கீர்த்திகா - நீர் வேலி, ரி.ஜெயகோபி - கோப் பாய், எஸ்.கோமளாதேவி - கோப் பாய், கே.கார்த்தீபன்- வல்வெட் டித்துறை, கே.சங்கீதா - வல்வெட் டித்துறை. எஸ்.சிவரஞ்சன் -எழுது மட்டுவாழ், ஏ.அமல்ராஜ் - கர வெட்டி, எஸ்.பிரதீபா - நெல்லி யடி, ரி.சதாசிவக்குருக்கள் கர வெட்டி, பி.விஜிதா - கரவெட்டி, எஸ்.சிவதர்சினி - வல்வெட்டித் துறை, கே.றமணன் -பருத்தித் துறை, என்.அகல்யா - செம்பியன் பற்று, பி.சந்திரவதனா-பருத்தித் துறை, ஆர்.ஜானகி -தும்பளை, எஸ்.கலையரசி-பருத்தித்துறை, எஸ்.கோசலா - பருத்தித்துறை, ஏ.சாந்தினி- தாளையடி, வி.உஷா -பத்திரகாளி கோவில்வீதி, எஸ். துஷாந்தினி - பருத்தித்துறை. (து,ற-7)

# புலமைப்பரீட்சை மீளாய்வு இரு மாணவர் சித்தி

(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டில் நடை பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரீட் சைப் . பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பித்த மாண வர்களின் மீளாய்வு முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ். மாவட் டத்திலிருந்து மீளாய்வு செய்த மாணவர்களில் இருவர் புல மைப் பரீட்சையில் சித்தியடைந் துள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ். இந்து ஆரம்பப் பாட சாலை மாணவன் செல்வன் கரு ணாகரன பிரணவன் 126 புள்ளி களையும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் மகாலிங்கம் ரஜீத் 125புள்ளிகளையும் பெற் றுள்ளனர்.

மீளாய்வுக்கு முன்னர் இவர் கள் இருவரும் பெற்ற புள்ளி தலா 123 ஆகும். 2004ஆம் ஆண்டிற் கான யாழ்.மாவட்டத்தின் புல மைப் பரீட்சை சித்திப் புள்ளி 124 என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். (ந)

# உழவு இயந்திரம் வழங்கக் கோரிக்கை

(இணுவில்)

அதிகரித்துவரும் கூலித் தொகையினால் கஷ்டப்படும் இணு வில் பகுதி விவசாயிகளது சிர மங்களைப் போக்க இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத்து க்கு இரண்டு சில்லு உழவு இயந் திரமொன்றைப் பெற்றுத்தருமாறு மேற்படி சம்மேளனத்தின் தலை வர் சி.திருக்குமார் உடுவில் பிர தேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் உடுவில் பிர தேச செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகளின் மாதாந்தக் கூட் டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (து-122)

# சட்டத்திலிருக்கும் ஓட்டைகளால் தப்பித்துச் செல்லும் குற்றவாளிகள்

இலங்கையில் குற்றச் செயல் களில் சம்பந்தப்பட்டதாகச் சந் தேகிக்கப்படும் நபர்களில் 30 சத வீதமானோருக்கு எதிராகவே வழக் குகள் தொடுக்கப்படுகின்றன.

இவர்களில் 4.5 சதவீதத் தினர் மாத்திரமே குற்றவாளிகளா கத் தீர்ப்பளிக்கப்படுகின்றனர். இதனை ஆய்வுகள் தெளிவுபடுத் தியுள்ளன.

2003 ஆம் ஆண்டில் சுமார் 53 ஆயிரம் குற்றச் செயல்கள் இழைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

அதிகளவிலான குற்றவாளி கள் சட்டத்திலுள்ள ஓட்டைக ளைப் பயன்படுத்தி தப்பித்து விடு கிறார்கள் என்றும் இந்நிலையை மாற்ற வேண்டுமென்றும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (க-7)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மேற்கு திசை கோபுரம் அமைப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ் வார் சுவாமி கோவில் மேற்குத் திசை வாசலில் திருக்கோபுர திருப் பணி ஆரம்ப விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி யளவில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கி.அன்னலிங் கம் தலைமையில் நடைபெறவுள் ளது.

மூன்று தளங்களைக் கொண்டு 31 அடி உயரமாக அமைக்கப் படவுள்ள இத்திருக்கோபுரத் தில் 25 விக்கிரகங்கள் உள்ளடக் கப்படவுள்ளன.

இம் மேற்கு வாயில் கோபுர அமைப்பைத் தொடர்ந்து ஆலயத் தில வடக்கு, தெற்கு திசை வாசல களிலும் வெகுவிரைவாக 21 அடி உயரமான திருக்கோபுரங்கள் அமைக்கப்படுமென ஆலய அறங் காவலர் சபைச் செயலாளர் கருணாமூர்த்தி தெரிவித்தார். (ற-35)

# நெருக்கடி மிகுந்த இணுவில் சந்தி

(இணுவில்)

காங்கேசன்துறை வீதி இணு வில் சந்திப் பகுதி தற்போது போக்கு வரத்தில் பாரிய நெருக்கடி நிலை யுள்ள பகுதியாக மாற்றமடைந துள்ளது.

இச் சந்திக்கு அருகில் வாடகை ஆட்டோக்கள், வான்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் முதலிய வற்றை நிறுத்திவைப்பதனாலும் மற்றும் வர்த்தக நிலையங்கள், பஸ் தரிப்பு நிலையம் போன்றன வீதியின் அருகில் இருப்பதனா லும் இந்த நெருக்கடிநிலை ஏற் படுவதாக பொதுமக்கள் தெரி விக்கின்றனர்.

இந்தச் சந்தியிலிருந்து குறிப் பிட்டளவு தூரத்தில் இரண்டு பெரிய பாடசாலைகளும், 3 புகழ் பெற்ற ஆலயங்களும் அமைநது இருப்பதும் குறிப்பிடத்தககது.

இந்த நெருக்கடிநிலை காரண மாக இவ்விடத்தில் தினமும விபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதுள்ளது. (து-122)

# நூல் வெளியீடு

(மருதங்கேணி)

பௌராணிகர் தென் புலோலி யூர் ஆ.ச.க.சுப்பிரமணியம் எழு திய பெரியபுராணம் வசனமும், இரண்டாம் சைவ வினாவிடை யும், திருவாதவூரர் புராண ஆய் வுரை ஆகிய நூல்களின் வெளி யீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய மண்ட பத்தில் ஓய்வுபெற்ற பிரதிக கல் விப் பணிப்பாளர் சே.ஏகாம்பர நாதன் தலைமையில் நடைபெறும்.

ஆசியுரையை சோ.ஜெயபால சுந்தரக் குருக்களும் வரவேற்பு ரையை முன்னாள் கடற்தொழில உதவிப் பணிப்பாளர் சு.கதிர் காமத்தம்பியும் வெளியீட்டு ரையை வடமராட்சி வடக்கு பிர தேச செயலர் எஸ்.வசந்தரூபனும் நிகழ்த்தவுள்ளனா. (க-35)

# மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு

(பொன்னாலை)

வெளிவாரி மருதனார் பயிற்சி நெறியினை நிறைவு செய்துள்ள மாணவர்களின் ஒன்றுகூடல் நிக ழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்சுகாதார சேவைகள் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், மாகாண சுகா தார சேவைகள் பிரதிப் பணிப் பாளர் டாக்டர் ஏ.கேதஸ்வரன் பிர தம அதிதியாகக் கலந்துகொள் கின்றார்.

'நீாப்' நிறுவன அனுசரணை யுடன் நடத்தப்பட்ட 2003 -2004 ஆம் ஆண்டு பயிற்சி நெறியை முடித்துக்கொண்ட சுமார் 65 மாண வர்கள் இவ் ஒன்றுகூடலில் கல ந்துகொள்ளவுள்ளனர். (து-49)

# கூட்டம்

சூழல் பாதுகாப்பு உரிமம் தொடர்பான தொழில்நுட்ப மதிப் பீட்டுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு சாவகச்சேரி நக ரசபையில் இடம்பெறவுள்ளதா கச் செயலாளர் ஆ.குணமணிதேவி தெரிவித்துள்ளார். (க-21)

# தட்டச்சு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வதிரியில் இயங்கிவரும் வடம ராட்சி சுருக்கெழுத்துக் கழகப் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் நலன்கருதி தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப் புக்களை எதிர்வரும் 18ஆம் திகதி முதல் நடத்தவுள்ளது.

இப்பயிற்சியைப பெறவிரும் புவோர் வார நாட்களில் காலை 9.00மணி முதல் பிப 2.00 மணி வரை கழகத்திலுள்ள உப செய லாளருடன் தொடர்பு கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

விசேட கழிவுக்கட்டணம் புதுவருடத்தை முன்னிட்டு

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு அனுப்பவேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருட்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதிசெய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டண விபரம்

ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, கொலண்ட் — 1Kg - 650/=

ஏனைய நாடுகளுக்கு (கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா , லண்டன் — 1Kg - 950/=

தொடர்புகளுக்கு:-

RAINBOW TRAVEL &TOURS

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)

தொலைபேசி - 222 3918, 0777 328219

குறிப்பு:- எமது நிறுவனம் கொழும்பை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்குகிறது.

விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் ரெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக , 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 33



### அத்தியாயம் X

நிலையியற் கட்டளை '78அ' இன் செல்லுபடியாகும் நிலை 2001 யு,னில் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டது. இக்கட்டத்தில் எண்பிக்கப்பட்ட துர்நடத்தையின்/தவறான நடத்தையின் அடிப்படையில் பிரதம நீதியரசரை நீக்குவதற்கான உத்தேச பிரேரணையொன்று தயாராகிக் கொண்டிருந்தது. இவ்வழக்கில் மனுதாரர் நிலையியற் கட்டளை 78அ நீதிமுறை அதிகாரங்களைக் கொண்ட தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதலை இயலச்செய்வதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தை அது அத்துமீறுகின்றதென்ற அடிப்படையில் அந்நிலையியற் கட்டளையின் செல்லுபடியாகும் நிலையை ஆட்சேபித்தார். இவ் விண்ணப்பத்துக்கிணங்க, தெரிகுழுவொன்று நியமிக்கப்படுவதைத் தடுப்பதற்கு உயர்நீதிமன்றத்தால் தடைப்படுத்தும் கட்டளையொன்று வழங்கப்பட்டது. எனினும் இவ்விடயத்தில் சபாநாயகர் தமது தீர்ப்பை வழங்குகையில், நிலையியற் கட்டளை '78அ' இன் கீழ் சபாநாயகருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அவரைத் தடைப்படுத்துகின்ற அத்தகைய கட்டளையை வழங்குவதற்கு உயர்நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லையென்றும் எனவே சொல்லப்பட்ட கட்டளைக்கு இணங்க வேண்டிய சட்டபூர்வமான கடப்பாடு சபாநாயகருக்கு இல்லையென்றும் தீர்மானித்தார்.

அதேவகையில் நிலையியற் கட்டளை 78ஆ. அரசியலமைப்பினால் பாதுகாக்கப்படும் பதவிகளை வகிக்கின்ற வேறு சில உத்தியோகத்தர்களை, அதாவது பாராளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர், கணக்காய்வாளர்,தலைமை அதிபதி, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடைமுறையைக் குறித்துரைக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1994 இல் இலஞ்சம், ஊழல் பற்றிய சார்த்தல்களைப் புலன் விசாரணை செய்வதற்கு நிரந்தர ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர்களை நீக்குவதற்கும் அதே நடைமுறை குறித்துரைக்கப்பட்டது.

***ஒரு தெரிகுழுவின் முன்னர் தரப்பினர் சார்பாக வழக்குரைஞர் தோற்றுதல***

வழக்குரைஞர் மூலம் தரப்பினர் வாதிப்பதற்கோ அல்லது அத்தகைய வாதத்தை அனுமதிப்பதற்குக் குழுக்களுக்குள்ள தத்துவங்கள் பற்றியோ நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடு எதுவும் இல்லை. எனினும் விதிவிலக்காக உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் மீது சார்த்தப்படும் துர்நடத்தை அல்லது தகவின்மை பற்றிய தெரிகுழுக்களின் விடயத்தில் தெரிகுழுவால் அத்தகைய புலன் விசாரணைக்குட்பட்டுள்ள நீதிபதி நேரிலோ வழக்குரைஞர் மூலமாகவோ தோற்றிச் செவிமடுக்கப்படுவதற்கு உரிமையுடையவராக இருக்க வேண்டுமென்று நிலையியற் கட்டளை 78அ கூறுகின்றது. அதனைத் தவிர ஏனைய தெரிகுழுக்களைப் பொறுத்தமட்டில் ஒரு தரப்பினருக்கு உதவுவதற்கு வழக்குரைஞரை அனுமதிப்பதானது அக்குழுக்களின் தற்றுணிபில் தங்கியுள்ளதென்பதும் அத்தகைய உதவியை அனுமதிப்பதற்குக் குழு நிபந்தனைகள் விதிக்கலாமென்பதும் தான் நிலைமை.

எனினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிகுழுக்கள் தாமே வழக்குரைஞரை அனுமதித்துள்ளதுடன் வேறு சந்தர்ப்பங்களில் அனுமதி மறுத்ததுண்டு. எனவே இவ்விடயத்தில் நிலைமாறாத வழக்கத்தைக் காணமுடியாதுள்ளது. பொதுவாகச் சட்டவறிஞர்கள் கேள்விகளை நேரடியாகக் கேட்க முடியாது. மாறாகக் குழுவின் மூலமாக மட்டுமே அவற்றைக் கேட்க முடியும். அரசியலமைப்புப் பற்றிய தெரிகுழுவுக்கு சட்டமா அதிபர் உதவியாயிருந்த அதேவேளையில் ஊடகத்துறை பற்றிய தெரிகுழுவின் முன்னர் வாதங்களை முன்வைத்த அரசியற் கட்சிகளின் சார்பாகத் தோற்றுவதற்குச் சட்டவறிஞர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

***சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள்***

சிறப்பு நோக்கங்களுக்காக ஏனைய பல்வேறு குழுக்களை நிறுவுவதற்கும் நிலையியற் கட்டளைகள் ஏற்பாடு செய்கின்றன. அவை அரசாங்கச் செலவினத்தை நுணுகி ஆராய்கின்ற அரசாங்கக் கணக்குக் குழுவிலிருந்து, தோற்றமளவிலான நீதி முறைக் கட்டளைகளைப் புரிகின்ற சிறப்புரிமைகள் பற்றிய குழு வரையில் பல்வகைப்பட்ட பணிகளை ஆற்றுகின்றன. சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களில், வேறு வகையில் குறித்துரைக்கப்பட்டாலன்றி, கூட்டநடப்பெண் மூன்றாக இருக்க வேண்டும். தவிசாளர் இல்லாத விடத்துக் குழு பிறிதோர் உறுப்பினரைத் தலைமை தாங்குவதற்குத் தெரிவு செய்யலாம்.

நிலையியற் கட்டளை 129 சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள் தொடர்பில் குறித்த சில விடயங்களுக்கு ஏற்பாடு செய்கின்றது. அத்தகைய குழுக்களுக்கு அவற்றின் தவிசாளரைத் தெரிவு செய்யும் அதிகாரமுண்டு. உறுப்பினரொருவர் சமுகமளிக்காதிருப்பதற்கு முன்னனுமதி பெறாமல் குழுவின் மூன்று அடுத்தடுத்த கூட்டங்களுக்கு சமுகமளிகாதிருந்தால் ஒரு வெற்றிடம் ஏற்படலாம். எனினும் ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி பெற்றுள்ள காலப்பகுதியில் அவ்வாறு குழுவின் கூட்டங்களுக்கு வராதிருந்தால் குழுவில் அவரின் உறுப்புரையை வறிதாக்கமாட்டார். கூட்டங்களைக் கூட்ட வேண்டிய கடமை தவிசாளருடையது. சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களில் வெற்றிடங்கள் தெரிவுக்குழுவினால் நிரப்பப்படுகின்றன. குழுவின் முதலாவது கூட்டத்தில் தவிசாளர் தெரிவு செய்யப்படுகின்றார்.

***தெரிவுக்குழு***

தெரிவுக்குழுவானது 121ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்தின் போதும், ஆலோசனைக்குழுக்கள், சட்டவாக்க நிலையியற் குழுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, கருமங்கள், அவற்றின் அமைப்பு, கூட்டநடப்பெண் ஆகியவற்றைப் பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்படுகின்றது. சபாநாயகரால் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் தெரிகுழுக்களைத் தவிர ஏனைய எல்லாப் பாராளுமன்றக் குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமித்தலும் அதன் கடமையாகும். அது தவிசாளராகச் சபாநாயகரையும் அரசியற் கட்சிகளின் தலைவர்களை அல்லது அவர்களின் நியமத்தர்களை உள்ளடக்கிய பதனேழு உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும். குறித்த சில சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுக்களிலும் சட்டவாக்க நிலையியற் குழுக்களிலும் தவிர ஏனைய குழுக்களில் இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைக்கும் அதிகாரம் தெரிவுக் குழுவுக்கு இல்லை. இருந்தபோதிலும் சபையில் தீர்மானத்தின் மூலம் பல்வேறு குழுக்களினதும் உறுப்பாண்மை காலத்துக்குக் காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந் நடைமுறை ஓரளவுக்கு ஒழுங்கற்றதாகவும் நிலையியற் கட்டளைகளை மீறியதாகவும் உள்ளபோதிலும் அதற்கெதிராக ஆட்சேபம் தெரிவிக்கப்படவில்லை. இக்குழு அது நியமனங்களைச் செய்கின்ற எல்லாக்குழுக்களிலும் கட்சிப் பிரதிநிதித்துவம் பற்றிய வழிகாட்டலையும் வகுத்துரைக்கலாம்.

தெரிவுக்குழுவின் நடப்பெண் 121ஆம் நிலையியற் கட்டளையில் குறித்துரைக்கப்படவில்லை. எனவே நிலையியற் கட்டளை 129(ஈ) யின் பிரகாரம் அது மூன்றாக இருக்க வேண்டும். (தொடரும்)

# முன்பள்ளி திறந்துவைப்பு






(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இளந்தளிர்,தெய்வம் முன்பள்ளிகளின் புதிய கட்டடங்கள் வவுனியா மாவட்டத்தில் இரு வெவ்வேறு இடங்களில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணி தெற்கில் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு **(NDRO)** நிறுவனத் தலைவர் குமாரசாமி தலைமையில் நடைபெற்ற முன்பள்ளித் திறப்பு விழா நிகழ்வில் மங்கள விளக்கினை நெடுங்கேணி காவல்துறைப் பொறுப்பாளர், வவுனியா வடக்கு பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் பொறுப்பாளர், நெடுங்கேணி பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர், வவுனியா அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவன நிர்வாக அலுவலகர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை மாவட்ட உதவிப்பணிப்பாளரும், நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனக் கொடியினை அதன் இணைப்பாளரும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியினை வவுனியா வடக்கு வலைய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் ஏற்றிவைத்தனர்.

இதனையடுத்து இளந்தளிர் முன்பள்ளிக் கொடியேற்றல் நடைபெற்றது. டென்மார்க் அகதிகள் பேரவையின் **(DRC)** நிதியுதவியுடன் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நிறுவப்பட்ட இளந்தளிர் முன்பள்ளியின் பெயர்ப் பலகையினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் திறந்து வைத்தார்.

முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தினை டென்மார்க் அகதிகள் பேரவையின் **(DRC)** வதிவிடப் பிரதிநிதி அலன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இரண்டாவது நிகழ்வாக இராமனூர் புளியங்குளம் என்னும் இடத்தில் தெய்வம் முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது.

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில், மங்களவிளககினை அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி ரமேஸ், சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குழுத் தலைவர் இராசையா, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய தெற்கு வலைய இணைப்பாளர் திருமதி அருளவேல்நாயகி, வவுனியா அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ராஜரெட்ணம், இராமனூர் பாடசாலை அதிபர் சுபாஸ்கரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை வவுனியா வடக்கு பிரதேசப் பொறுப்பாளர் இனியவன், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை மாவட்டப்பணிப்பாளர் மூர்த்தி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனக் கொடியினை முன்பள்ளிகளுக்கான கல்வி உதவிப் பணிப்பாளர் விநாயகமூர்த்தி, தெய்வம் முன்பள்ளிக் கொடியினை அதன் ஆசிரியர் திருமதி நாகசுலோசினி ஆகியோர் ஏற்றிவைத்தனர். (க)

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் சிவதொண்டன் சித்திர மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க)

# ஒரு இலட்சம் பேருக்கு காணிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

காணிகள் இல்லாத ஒரு இலட்சம் பேருக்கு காணிகளை வழங்குவதற்கு காணியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் இவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக காணியமைச்சர் அனுர குமார திஸாநாயக்க நேற்று முன்தினம் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாகாண விவசாய காணியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கட்டமைப்பொன்று தேவையென்று குறிப்பிட்டார்.

இதேவேளை, மாகாண காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பது தொடர்பாக 3 மாத காலத்திற்கு ஒரு முறை பேச்சுவார்த்தை நடத்துவதென்று மாகாண சபைகளில் விவசாய மற்றும் காணி அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (க-9)

## இன்று ஒரு தகவல்

# ஏற்பது இகழ்ச்சி

ஒருநாள் நபிகள் நாயகத்திடம் ஒரு இளைஞன் வந்து நின்றான். உடல் நல்ல ஆரோக்கியமாக இருந்தது... இருந்தாலும் அந்த இளைஞன் இவரிடம் பிச்சை கேட்டான் "உன் வட்டில் எதுவும் இல்லையா?" என்று கேட்டார் இவர். "ஒரு ஒட்டகத்தோல் இருக்கிறது. அதை விரித்துப் போட்டு அதில் தான் படுக்கிறோம். ஒரே ஒரு பாத்திரம் இருக்கிறது. தண்ணீர் குடிப்பதற்கு அதைத்தான் உபயோகப்படுத்துகிறோம். இந்த இரண்டும்தான் எங்களுக்கு இருக்கும் ஆஸ்தி" என்றான் அவன். நபிகள் நாயகம் பார்த்தார் "நீ உடனே வீட்டுக்குப் போய் அந்த இரண்டு பொருளையும் இங்கே எடுத்துக் கொண்டு வா" என்றார்.

இவன் உடனே போனான் கொஞ்ச நேரத்தில் அந்த இரண்டையும் எடுத்துக்கொண்டுவந்து சேர்ந்தான். நபிகள் நாயகம் அங்கேயிருந்த அவருடைய தோழர்களைப் பார்த்து "நீங்கள் யாராவது இதை விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறீர்களா?"என்றார். உடனே ஒருவர் "நான் ஒரு திர்ஹம் கொடுத்து அதை வாங்குகிறேன்" என்றார். "வேறு யாராவது அதிகவில்லை கொடுக்கமுடியுமா?" என்று ஒரு கேள்வி கேட்டார். "நான் இரண்டு திர்ஹம் கொடுக்கிறேன்" என்றார் இன்னொருவர். உடனே அவரிடம் அந்தப் பொருட்களை விற்றார்.

அவர் கொடுத்த காசை வாங்கி இந்தப் பையனிடம் கொடுத்தார். "தம்பி! இரண்டு திர்ஹம் இப்போது கையில் இருக்கிறது. இதில் ஒரு திர்ஹம எடுத்துக் கொண்டுபோய் ஏதாவது தானியம் வாங்கிக்கொள். அதை சமைத்து நீயும் உன் வீட்டில் உள்வர்களும் சாப்பிடுங்கள். இன்னொரு திர்ஹம் இருக்கிறதல்லவா... அதற்கு ஒரு கோடரி வாங்கிக் கொண்டு என்னிடம் வா" என்றார்.

உடனே அவனும் அதே மாதிரிச் செய்தான்.ஒரு கோடரி வாங்கிக் கொண்டு இவரிடம் வந்து சேர்ந்தான். இவர் அந்த கோடரிக்கு காம்பு ஒன்று தயாரித்துக்கொடுத்தார். "தம்பி! இதை நீ எடுத்துக்கொண்டு காட்டுக்குப்போ! காய்ந்த மரக் கிளைகளை வெட்டிக் கொண்டுவா அவற்றைக் கடைத் தெருவுக்குக் கொண்டுபோய் விற்பனைசெய் பதினைந்து நாள கழித்து என்னிடம் வா உனக்கு எவ்வளவு லாபம் கிடைத்தது என்று சொல்" என்றார். இவன் சரி என்று கூறிவிட்டுப் போனான்.

பதினைந்து நாள் கழித்து வந்தான். முதல் முறை அவன் இவரிடம் வந்தற்கும் இப்போது வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. இப்போது வந்த போது அவனது முகத்தில் ஒரு தெளிவிருந்தது. மலர்ச்சி இருந்தது. அவன் மிகவும் மகிழ்ச்சியுடன் பேசினான். "ஐயா! இந்த 15 நாளில் நான் 10 திர்ஹம் சம்பாதித்தேன். அதில் உடுக்க உடையும் வாங்கிக் கொண்டேன். இப்போது நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன் அடுத்தவர்களை நம்பிப் பிழைக்க வேண்டிய அவசியமே இல்லை" என்றான். இதைக் கேட்டு விட்டு நபிகள் நாயகம் "நீ சொல்வதைக் கேட்கும் போது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. எப்போதும் முயற்சிக்குத் தகுந்த பலனை ஆண்டவன் கொடுக்கிறான் என்பதை மறந்து விடாதே! பிச்சை கேட்பவர்களை ஆண்டவன் விரும்புவதில்லை" என்று அந்த இளைஞனுக்கு உபதேசித்தார்.

இது அவனுக்கு மட்டும் செய்த உபதேசம் இல்லை. உடல் ஆரோக்கியமாக இருந்தாலும் பிச்சை எடுக்க வேண்டும் என்று நினைக்கும் எல்லோருக்கும் செய்த உபதேசம்

"கையேந்தும் செய்கையினும்

காடு சென்று விறகு வெட்டி

# அரசாங்கம் ஒன்றை அமைப்பது மக்களுக்குச் சேவை செய்வதற்கே!

## ஐ.ம.சு.மு வின் நிலைப்பாடு தலைகீழ் என்கிறார் ஐ.தே.க. எம்.பி

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லையெனத் தெரிவித்து வெலிகமப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மட்டுமன்றி சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அரசினால் முடியாது போயுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

வெலிகம ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டப் பேரணி வெலிகம மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன்பாக முடிவடைந்தது.

நாடு முழுவதிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளதாக இதில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜேசேகர தெரிவித்தார்.

பேரணியின் இறுதியில் அங்கு இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

வாழ்க்கைச் செலவு மிகவும் மோசமான முறையில் உள்ளது. மக்கள் உண்ண குடிக்க முடியாதுள்ளனர். வடக்கு-கிழக்கு பிரச்சினை,சுனாமிப்பிரச்சினை என்பவற்றுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இது விடயம் தொடர்பாக ஜனாதிபதி ஒன்று கூறுகின்றார். பங்காளியான ஜே.வி.பி வேறு ஒன்று கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் நாடு அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முடியாது நாடு இல்லாது போனாலும் நாம் ஆட்சியிலிருக்க வேண்டுமென அனுரா பண்டார நாயக்க கூறுகின்றார். அரசாங்கத்தைக் கொண்டு வருவது அதிகாரத்தில் இருப்பதற்காகவல்ல ஆட்சியில் அமர்த்திய மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே என்றும் குறிப்பிட்டார். (ந-8)

# நலன்புரி நிலையங்களில் நிலவும் குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் நலன் புரி நிலையங்களில் நிலவும் குறைபாடுகளை உடனடியாகத் தீர்க்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு தொடர்பான அமைச்சு நடத்தி வரும் தேசிய சேவைகளுக்கான நிலையத்துககு கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில மூன்று பாடசாலைகளில் இயங்கும் நலன்புரி நிலையங்களில் குறைபாடுகள் நிலவுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நிலையத்தின் பொறுப்பதிகாரியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனக முதலிகே தெரிவித்திருக்கிறார்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்திக் காரியாலயத்தில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் செய்த மோசடி தொடர்பாக உரிய தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில மாவட்டங்களில் அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

கொழும்பு, கிளிநொச்சி, மன்னார் , புத்தளம், களுத துறை ,காலி,மாத்தறை,அம்பாந்தோட்டை மாவட்டங்களில் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் எல்லைக் குட்பட்ட பிரதேசம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை அதிகாரசபை நிறைவேற்றும். அவ்வாறே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை,மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில கடற்தரையிலிருந்து 200 மீற்றர் எல்லைக் குட்பட்ட பிரதேசங்கள் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களையும் நகர அபிவிருத்தி அதிகார சபையே நடைமுறைப்படுத்தும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படவிருக்கின்றன ஏனைய மாவட்டங்களில அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மாகாண சபைகளுககு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இடை நிறுத்தபபடவில்லை என்பது குறிபிடத்தக்கது. (க-7)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தாதமையால் நிதியுதவிகள் கை நழுவிப் போகும் அபாயம்

பஷீர் சேகுதாவூத்

வேண்டும் என்று நினைக்கும் எல்லோருக்கும் செய்த உபதேசம்

"கையேந்தும் செய்கையினும்
காடு சென்று விறகு வெட்டி
மெய்யேந்தும் வாழ்வதனை
மெச்சுகின்ற நாயகமே" என்று இதைப் பற்றிப் பாடியிருக்கின்றனர். பொதுவாக இதுபோன்று பெரியவர்கள் கூறியிருக்கும் உபதேசங்களைக் கேட்டு அதன்படி நடந்து கொள்வது எல்லாருக்குமே நல்லது. பலரும் உபதேசங்களைக் கேட்கின்றனர்... ஆனால் அதன்படி நடப்பதில்லை அதனால் தான் வீணாகிப் போய்விடுகிறார்கள்.

ஒரு நல்ல வித்துவான் அருமையாக ஹார்மோனியம் வாசிப்பார். குடிப்பழக்கம் அவரைக் கெடுத்துவிட்டது பிச்சையெடுக்கும் அளவுக்கு வந்துவிட்டார்.

ஒரு பெரியவர் இதைப்பார்த்தார். இதோ பாருங்கள் உங்களிடம் நல்ல சங்கீத ஞானம் உள்ளது. திறமை இருக்கிறது. அப்படிஇருக்கும் போது அனாவசியமாக எதற்கு இப்படி பிச்சை எடுக்கவேண்டும். இப்போது நான் ஒரு அருமையான ஹார்மோனியம் வாங்கி அதை உங்களுக்குப் பரிசாக்கி கொடுக்கிறேன். அதை உபயோகப்படுத்தி இனிமேல் நீங்கள் சுயமாக சம்பாதித்துச் சாப்பிடவேண்டும் என்றார். இவரும் நம்பிக்கையோடு தலையசைத்தார்.அவரும் நல்லதொரு ஹார்மோனியப் பெட்டியை வாங்கிக் கொடுத்தார். "மூன்று மாதம் கழித்து மீண்டும் என்னை வந்து பாருங்கள்!" எப்படி இருக்கிறது நிலமை என்று கூறுங்கள் என்றார். வித்துவான் மிகவும் பவ்யமாக அதை வாங்கிப் போனார்.

அவர் சொன்னது போலவே மூன்று மாதம் கழித்து திரும்பி வந்தார். ஆனால் வெறுங்கையுடன் வந்தார். "இன்னுமோர் ஹார்மோனியப் பெட்டி வாங்கிக் கொடுத்தால் பரவாயில்லை" என்றார். "ஏற்கனவே வாங்கிக்கொடுத்தது எங்கே?" என்று கேட்டார் இவர். "அது அடகுக் கடையில் இருக்கிறது" என்றார். இவரையெல்லாம் எப்படி திருத்துவது?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## பஷீர் சேகுதாவூத்

(கொழும்பு)

சுனாமி பேரலையால் பாதிப்புற்ற பகுதிகளின் மீள் கட்டுமாண வேலைகளுக்கான பொதுக்கட்டமைப்பினை அரசாங்கம் ஏற்படுத்தத் தவறியதன் விளைவாக நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு உதவிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஏறாவூர் தாதுசலாம் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பொதுக்கட்டமைப்பு என்பது வெறுமனே மீள் கட்டுமான பணிகளை மேற்கொள்ளுவதற்கான அதிகார சபையாக மட்டுமன்றி இனப்பிரச்சினை தீர்வுக்காண முன்னோடி நடவடிக்கையாகவும் கருதப்படுகின்றது.

இவ்வாறான சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த தவறியதன் விளைவாக நாடு பெரும் பொருளாதாரப் பின்னடைவை சந்தித்துள்ளதுடன் நாட்டின் பணவீக்கமும், விலையேற்றமும் அதிகரித்து சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி இடம்பெறும் படுகொலைகளினால் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்த பீதி ஏற்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பினை ஏற்படுததுவதன் மூலம் கிழக்கு மாகாண படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் பஷீர் சேகுதாவூத் மேலும் தெரிவித்தார். (க-9)

## தவறான தகவலை வழங்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இறந்து மற்றும் காணாமல் போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்காக தவறான தகவல்களை வழங்கியவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிறப்பு மற்றும இறப்பு சட்டமூலத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நீதி அமைச்சர் டபிள்யூ.டீ.யூ ஜோன செனவிரத்தின் தெரிவித்தார்.

இந்த திருத்தத்தின் அடிப்படையில் குற்றங்களை மேற்கொளளுபவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு குறையாத சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## சமாதானம் மீள்குடியமர்வு குறித்து கருத்துக்கணிப்பு!

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் மற்றும் வடக்கில் மீள குடியேற்றம் சம்பந்தமாக முஸ்லிம்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அமைப்பினதும் இஸ்லாமிய நிவாரண அமைப்பினதும் அனுசரணையில முஸ்லிம் பிராந்திய ஒன்றியம் இதனை ஆரம்பித்துளளது.

ஆறு மாத காலத்திற்குள் இக் கருத்துக்கணிப்பு நிறைவு செய்யப்படவுள்ளது.

இதனை அடுத்து குறிப்பிட்ட கருத்தறியும் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபையிடமும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-9)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் முன்னணிப் பெறு பேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றின்விபரம் வருமாறு,

**மானிப்பாய் இந்துக்கல்லூரி**

ரி.துஷ்யந்தி (9ஏ,பி), எம்.சிவசங்கர் (7ஏ,பி,சி,எஸ்), எஸ்.விநோத் (6ஏ,3பி,சி), ஏ.றுக்ஷான் (6ஏ,பி, 2சி), கே.ராகுலன் (4ஏ, 3பி,சி, 2எஸ்), பி.துஷ்யந்தன் (4ஏ, 2பி, 3சி)

**கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

எம்.வசந்தரூபன் (5ஏ, 2பி, 2சி,எஸ்), இ.றோகினி (4ஏ, பி, சி,4எஸ்), இ.ரிசியா (4ஏ,பி, 2சி,3எஸ்), கு.சிந்துஜா (4ஏ, 3பி,சி,எஸ்), அ.ஜனகன் (4ஏ, 2பி,2சி,எஸ்).

**மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**

ஸ்ரீ.றொசானி (5ஏ, 2பி,3சி), நா.கௌசல்யா (5எ, 2பி, 3சி), ஜெ.வைஷ்ணவி (5ஏ,2பி,2சி, எஸ்),நா.கோபிநாத்(5ஏ,3சி,எஸ்) து.றெமீனா (4ஏ,3பி.2சி.எஸ்), சா.நிரோசினி(-ஏ,சி,4எஸ்).

**மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி**

ஜெ.ஜெயரஞ்சினி (8ஏ,2பி), சி.துளசி (6ஏ,3பி,சி), த.பிரியலதா (5ஏ,3பி,2சி),ம.வனிதா(5ஏ,3பி, சி,எஸ்), இ.கஷ்டனி (5ஏ. பி,3 சி,எஸ்), ர.துளசி(4ஏ,3பி,3சி), சி.சர்மிளா (4ஏ.3பி,சி,2எஸ்), யோ.அபிசலா (4ஏ,2பி.சி, 3எஸ்), ம.சங்கீதா (4ஏ,2பி,2சி,எஸ்), நா.சுகந்தா (4ஏ,பி, 2சி, 3எஸ்), வி.கீதாசினி (3ஏ,5பி,2சி), தி.வாசுகி (3ஏ,4பி.3சி), ந.யாழினி (3ஏ.3பி,4சி), க.கிருஷிகா (3ஏ, 2பி. 5சி), சு.சுபத்திரை (3ஏ. 4பி,2சி), க.உமாபதி(3ஏ, 2பி. 4சி, எஸ்), உ.சர்மிகா (3ஏ, 3பி,3சி,எஸ்)

**வைத்தீஸ்வராக் கல்லூரி**

ஜெ.தாரணி (4ஏ, பி, 3சி,2 எஸ்), த.சுலக்சனா (3ஏ,பி, 2சி,3எஸ்); ந.பிரதீபன் (2ஏ, 4சி,2எஸ்), இ.இராமதீபன் (2ஏ, பி,3சி,3எஸ்) செ.செந்தூரன் (2ஏ,4சி,2எஸ்), தி.நிர்மலா (2ஏ,2பி.3சி,3எஸ்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

க.முரளீதரன்10ஏ (ஆங்கில இலக்கியம் ஏ), சு.தினேசன் (7ஏ,2பி,எஸ்), இ.அர்ச்சுனா (6ஏ,பி,2சி,எஸ்), இ.நிருபன் (5ஏ,பி, 2சி,2எஸ்), சி.ரிஷபன்(5ஏ,5சி).

**யாழ்.இந்துக்கல்லூரி**

ரி.அஜந்தன்(10ஏ), கே.அமரேஷ்(10ஏ),எஸ்.நிஷாந்தன் (10ஏ),எஸ்.தேஜோமயநாதன் (10ஏ),எஸ்.விதூஷன் (10ஏ), எஸ்.யோகநாதன்(10ஏ), ரி.கோகுலன் (9ஏ,சி), எஸ்.தனுராஜ் (9ஏ பி),வி.தர்ஷன் (9ஏ சி), ஈ.துவாரகன் (9ஏ,பி), கே.முகிலன் (9ஏ சி), ரி.பிரசாந்த் (9ஏ பி), கே.யாதவராஜன்(9ஏ,சி), ரி.பாலரூபன்(9ஏ,சி), பி.ஜனாத்தனன் (9ஏ,சி), ஏ.சுலக்ஷன் (9ஏ பி), எஸ்.சுலக்ஷன் (9ஏ,சி), என்.பிரகாஷ் (9ஏ, எஸ்), ரி.திவா கரன் (9ஏ சி), ரி.அர்ஜுன் (8ஏ சி எஸ்),ஜே.யேசுதன் (8ஏ,பி,சி), வை.கஜந்தன் (7ஏ,பி,2சி), எஸ்.இளமாறன் (7ஏ 2பி 2சி), ரி.கிஷோகுமார் (7ஏ,பி,2சி), எஸ்.சயிந்திரன் (7ஏ2பிசி), வி.அஜந்(7ஏ,பி,2சி), எஸ்.ஜனகன் (6ஏ 4பி), எஸ்.கோகுலன(7ஏ 3பி), என்.நிரோஷன் (6ஏ 2பி,2சி), ஏ.நிருஷன் (6ஏ 3பி சி), பி.அருண்புஜன் (7ஏ2பி சி),வி.பிரணவன் (6ஏ2பிசிஎஸ்), எஸ்மோகனராஜ் (7ஏ,3சி), என்.நலவந்தன் (7ஏ.2பிசி), கே.பிரசாத் (7ஏ 2பி சி), கே.பிரணவரூபன்(7ஏ 2பிஎஸ்), எஸ்.சிறிஜெயபவன் (7ஏ3பி), ஏ.தெய்வீகன் (6ஏ.2பி 2சி), எம்.அருளினியன் (7ஏ 2பி எஸ்), எஸ்.பரதன் (7ஏ 2பி எஸ்), எஸ்.ஜெயசிந்த் (6ஏ பி3சி), கே.காந்தரூபன் (6ஏ 2பி 2சி), ரி.மிதுலன் (6ஏ3பி எஸ்), கே.சிவகணேசன் (6ஏ 3பி சி), வி.சிறிவித்தகன் (6ஏ2பிசிஎஸ்), எஸ்.தினேஷ் (6ஏ பி2சிஎஸ்), பி.இந்திரகுமார் (6ஏ2பிசி), எஸ்.கோபிராஜ் (6ஏ 2பி 2சி), எம்.நிரஞ்சன் (6ஏபிசி எஸ்) எஸ்.நிதர்சன்(6ஏ,3பி,சி)பி.சேவியர் அமலநாதன் (7ஏபிசி எஸ்), வை.பவனீதன் (6ஏ.2பிஎஸ்சி), [illegible].கஜந்தன் (6ஏ 4பி), வி.மயூரதன்(6ஏ.3பிசி), எம்.பிருந்திலன் (6ஏ.3பிசி), க.கஜீபன் (8ஏபிசி), சு.விசாரதன் (6ஏ,4பி), வி.ஏ.யுகராஜ் (8ஏ,2பி), கே.எச்.கிறீசன் (8ஏபி,சி),க.ஜனகன் (8ஏபி எஸ்), த.ஜனந்தன் (8ஏபி,சி), து.ஜெயந்தன் (8ஏபி,சி), ந.தவராஜகுமாரன் (8ஏ 2பி), ப.அரிராம் (8ஏ,பி,சி), சி.அருணன் (8ஏ,பி,எஸ்) ரா.நிருஷன் (8ஏ, பி,சி),க.நிஷாந்த் (8ஏ,பி,எஸ்), ம.பிருந்தாபன் (8ஏ,சி,எஸ்), செ.சோபிஷன் (8ஏ,சி,எஸ்), ரா.சுகிராஜ் (8ஏ,2சி), யோ.தினேஷ்வரன் (8ஏ, 2சி), கு.விஜிகுமார்(8ஏ,2பி), வ.யோகதீசன் (8ஏ,2பி), சி.மதீசன் (8ஏ, பி,எஸ்), பா.பிரதீப் (8ஏ.2பி), ச.சஜிரதன் (8ஏ, சி, எஸ்).

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

கோ.தாட்சாயினி (7ஏ,3பி), சு.சுஜிதா (7ஏ,2பி), ந.அமுதினி (5ஏ,3பி,சி,எஸ்), அ.இந்துஜா (5ஏ,பி,3சி), மு.சதீஜா (4ஏ,6பி), செ.சிவகௌசி (4ஏ,3பி,3சி), ப.சாளினி(3ஏ,2பி,4சி,எஸ்), தி.சோபனா (3ஏ,2பி,சி,3எஸ்), கி.கமலச்செல்வி (3ஏ,பி,3சி, 3எஸ்),செ.அஜந்தினி (3ஏ,பி, 3சி,2எஸ்), த.நிவேதிகா (2ஏ,3பி,3சி,2எஸ்), ஆ.ரேணுகா (2ஏ,2பி,4சி,2எஸ்), சி.நிசல்யா (2ஏ,2பி,4சி,2எஸ்), எ.மேரினி (2ஏ,பி,5சி,2எஸ்), சி.சிறீவாணி (2ஏ,6சி,எஸ்), த.குகாயினி (ஏ,2 பி,3சி,3எஸ்),த.ஜெயவேணி (ஏ,பி,2சி,4எஸ்), ப.அகல்யா (ஏ,5சி,3எஸ்), நூ.தப்த்தா ((ஏ,4பி ,2சி,2எஸ்), இ.நிரோஜினி (எ,3பி,5எஸ்),

**கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்**

பே.புஸ்பராசா (7ஏ,2சி,எஸ்), த.சிவகரன் (6ஏ.பி,2சி,எஸ்), வி.மயூரதன் (5ஏ,2பி,3சி), சி.ஐங்கரன் (5ஏ,3பி,சி,எஸ்), மா.சுபாகரன்(4ஏ, 4பி,சி,எஸ்), அ.திருச்செந்தூரன் (4ஏ,2பி, 3சி,எஸ்), நி.நித்தியா (4ஏ, 2பி,3சி,எஸ்), சி.சிவப்பிரியா (4ஏ,2பி 2சி,2எஸ்), ச.வசந்தகுமாரி (4ஏ,பி,3சி,2எஸ்),த.சரண்ராஜ் (3ஏ, 3பி,2சி,2எஸ்), ஆ.ஸ்ரீ.சண்முகராசா (3ஏ,6சி), சு.சுகந்தராசா (3ஏ,2பி,5சி), க.கஜந்தினி (3ஏ,2பி, 3சி,2எஸ்), பா.குபேரதி (3ஏ,பி,4சி,2எஸ்), து.ரவிசாந்தி (3ஏ,பி,4சி,2எஸ்), ச.சரிதா (3ஏ,பி,4சி,2எஸ்).

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை**

இ.நித்தியா(10ஏ), சி.நிலானி (10ஏ), அ.கலைவதனி (10ஏ), உ.அனுஷா(9ஏ,பி), த.தமிழினி (9ஏ,பி) செ.சுகன்யா(8ஏ,2பி), இ.மாதுலா(8ஏ), ந.தாட்சாயினி (7ஏ, 3பி), ச.அகல்யா (7ஏ,பி), சி.கோபிகா (7ஏ,சி,எஸ்), து.திருமகள் (7ஏ,2பி,எஸ்),

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

வி.நிஷாந்தி(10ஏ) த.நிஷாந்தி (9ஏ,பி), வ.நிவேதிகா (9ஏ,பி), க.கம்சிகா (8ஏ,2பி), சு.தனுஷா (8ஏ,2பி), சி.உஷிதா (8ஏ,2பி), அ.ரேகா (8ஏ,பி,சி), ந.மேனகா (7ஏ,2பி,சி), த.மிதுலா (7ஏ,2பி,சி),

**வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி**

ரி.தயாபரன் (9ஏ,பி), எம்.வசிகரன்(9ஏ,பி), கே.அலன் ஜெரோசன் (9ஏ,பி) வி.ரஜீவன் (9ஏ,சி), எஸ்.விசாகன் (9ஏ,சி), கே.நிதர்ஷன்(8ஏ,2பி), ஜே.பூங்குன்றன் (8ஏ,2பி),ஜே.ரகுராம் (8ஏ,2பி), ஆர்.ரஜீவன் (8ஏ,2பி), எஸ்.நிமலன் (8ஏ,பி,சி), பி.ஜனராஜா(8ஏ,பி,சி), எஸ்.அகி லன் (7ஏ,பி,2சி), கே.ரஜீவன் (7ஏ,பி, 2சி),எஸ்.தசபுத்திரன்(7ஏ,பி,2சி)

**வட இந்து மகளிர்கல்லூரி**

தி.தாரணி (10ஏ), இ.சுஜிதா (9ஏ,பி), செ.அன்பரசி (9ஏ,பி), வே.சுகன்யா (9ஏ,சி), ப.பாரதி (9ஏ,சி),த.வினோதினி, செ.செல்வரஜிதா(8ஏ,2பி), பா.மயூரி(8ஏ,பி,சி), ப.சுபேந்தினி (8ஏ,பி,எஸ்), ம.சோபனா (7ஏ,பி,2சி), பே.அஜந்தினி (6ஏ,2பி,2சி), ம.காயித்திரி (6ஏ,பி,3சி), த.விமல்சினி (6ஏ,3பி,எஸ்), கு.நிசானி (6ஏ,2பி,2சி), தி.அஸ்வினி (6ஏ,3பி,எஸ்),

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

ச.ஜெயநீதன் (9ஏ,பி), க.கீர்த்தனா (8ஏ,2பி), யோ.கேசிகா (7ஏ,3பி), சி.நிசாந்தி (7ஏ,பி 2சி), சொ.பிரேமலதா (6ஏ,2பி, 2சி), ச.சோபிதா (5ஏ, 2பி,2சி), க.பவித்திரா (5ஏ,5சி), உ.பிறேமிலா (4ஏ,3பி,3சி), ச.சோபன் (4ஏ,2பி,4சி), கு.சுகன்யா (4ஏ,2பி,3சி,எஸ்)

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ஏ.கார்த்திக் (10ஏ), எஸ்.தர்ஷிகா(10ஏ),கே.கஜந்தினி (10ஏ),என்.நிலந்தினி (10ஏ), ஜே.ஜீவகன் (9ஏ,பி), ரி.விசாகன் (9ஏ), மி.கஜலக்ஷன் (9ஏ,சி), எஸ்.ஜான்ஸி(9ஏ,சி), எஸ்.சுகன்யா(9ஏ,சி), வி.தனுஷியா (9ஏ,சி), பி.றெனோஸா (9ஏ,பி), ஆர்தீபனா(9ஏ,பி),கே.ரஜிலா (9ஏ,பி), ஆர்.மோகனகாந்த் (8ஏ,பி,சி), பி.சத்தியதாஸ் (8ஏ,2பி), எம்.தேவகரன் (8ஏ,2பி), ஆர்.ரவிவர்மன் (8ஏ,பி,எஸ்), எம்.லக்ஸாயினி (8ஏ,பி,சி), எம்.துஷிதபிரியா (8ஏ,பி,சி), ஆர்.சுந்தினி(8ஏ,2பி), எஸ்.இலக்சியா (8ஏ,பி,சி), என்.சுசிதா (8ஏ,பி,சி), ஆர்.சுகந்தன் (8ஏ,பி,சி),பி.ரஜீவன் (7ஏ,பி,சி), எஸ்.வைத்தியதாஸன் (7ஏ,பி, 2சி),ஐ.சிவகுணாளன் (7ஏ,2சி), ஜி.பிரவீணா(7ஏ,3பி), ரி.கஸ்தூரி (7ஏ, 2பி,சி), எஸ்.சோபிஜா (7ஏ,2பி,சி), ரி.தர்ஷிகா(7ஏ,3பி), என்.நிரோஜன் (6ஏ,3பி,சி), என்.இன்பராஜ் (6ஏ, பி, 2சி,எஸ்), எஸ்.சோபனா (6ஏ, 3பி,சி), கே.கிருபாகரி (6ஏ,2பி,2சி), பி.மிவர்ணா (6ஏ,3பி,சி),பி.தீபிகா (6ஏ,2பி,சி,எஸ்), பி.கௌதமி (6ஏ.2பி, சி.எஸ்), பி.சாரதா (6ஏ,2பி,2சி),

**சென் பற்றிக்ஸ் கல்லூரி**

எஸ்.ஸ்ரீஹரிபாலா (9ஏ,பி) ஏ.ஜி.பிறிற்ரோ (8ஏ,பி,சி),யு.தயாஸ்வரன் (8ஏ,2பி), ஜே.ஜே.நிரூஸன் (8ஏ,பி,சி), ஏ.ஜே.டெனிசியஸ் (8ஏ,சி), என். திபேரியஸ் (7ஏ,பி,2சி), எம்.வி.விமல்ராஜ் (7ஏ,2பி,சி), கே.ஆரூரன் (7ஏ, சி,எஸ்), ஆர்.ராஜ்றெனிசியஸ் (7ஏ,2பி,சி),ஏ.அன்ரேநிரோஷன் (7ஏ,2பி,சி), எ.ஏ.பிரான்ஸிஸ் (6ஏ,பி,2சி). ஜே.அஜந்தன் (6ஏ,பி,3சி), பி.றெக்னோ (5ஏ, 3பி,2சி), எம்.எவ்.சில்வின் (5ஏ, 4பி,எஸ்),எவ்.எம்.பிரதீபராஜ் (5ஏ,4சி,எஸ்), ஏ.ஏ.பி.அனக்கிளிற் (5ஏ,4சி,எஸ்), எவ்.எல்.எமர்ஸன் (5ஏ,3பி,சி),வி.ஏ.பெறூன்(5ஏ,4பி,சி), ஜே.ஆர்.நொபேட்ஸன் (5ஏ,3பி,சி), ஆர்.நிக்ஸன் (5ஏ,3சி,எஸ்),

**கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி**

கு.குணஜா (4ஏ,3பி,3சி), ச.ஹம்சத்வனி (4ஏ,2பி,3சி, எஸ்),த.நிஷாலினி (4ஏ,2பி,3சி, எஸ்),சி.ஜெகதீசன்(3ஏ, 3பி,சி,3எஸ்), யோ.கஜேந்தினி (3ஏ,2பி,4சி),சு.மயூறி (3ஏ,3பி, 3சி,எஸ்),மு.விஜயகௌரி (2ஏ.3பி,3சி,2எஸ்), தா.நதிராஜா (2ஏ,சி,4எஸ்), சா.கார்திகா (2ஏ,2பி,2சி,2எஸ்), த.கிரீந்திரன் (ஏ,5பி,சி), ச.கோகிலன் (ஏ, 5பி,சி,2எஸ்),த.கவிதா (ஏ,3பி,5சி), ப.கஜேந்தினி (ஏ,பி, 4சி,3எஸ்), அ.ஜெஜதா (ஏ,பி,3 சி, 2எஸ்),மை.தனுஷா (ஏ,பி, 3சி,2எஸ்), பா.விதுப்பிரியா (ஏ, 4பி,5சி), (ற-19,7,37,101)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்

## அனுரா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை உன்னதமாக முன்னெடுப்பதே அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாகும் என கைத்தொழில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள டென்மார்க் தூதுவராலயம் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய 'இலங்கையில் டென்மார்க்கின் நாட்கள்' என்ற நிகழ்ச்சியில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லத்தயாராக இருக்கின்றது அது எமது அரசாங்கத்தின் ஐக்கிய செயல்திட்டமாகும் மக்களின் பசியுடன் பேரம் பேசலில் ஈடுபடவேண்டாம். மக்களின் வாழ்விடங்களுடன் பேரம் பேசலில் ஈடுபடவேண்டாம் சமாதானத்துக்காகமைல் கணக்கில் நீண்டதூரம் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக்காண அர்ப்பணிப்புடன் செயற்படத்தயாராகவுள்ளனர்.

நீண்டகாலமாக டென்மார்க்குக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே நீண்டகாலத் தொடர்பு உண்டு. சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் இந்த உறவுகள் மேலும் வலுவடைந்தன எனவும் அனுரா பண்டாரநாயக்க தனது உரையில் குறிப்பிட்டார்.(ற-8)

# மாவட்டங்களுக்கிடையிலான வேகநடைப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு,கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான வேகநடைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மைக்கேசர் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வேகடைப் போட்டியில கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்தில் இருந்தும் கழகங்களிலிருந்தும் வீரர்கள் தெரிவ செய்யப்பட்டுள்ளனர்.

இவ் வேக நடைப்போட்டி ஆண்களுக்கு 10கிலோ மீற்றர் தூரமும்பெண்களுக்கு 5கிலோ மீற்றர்தூரமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# கோரிக்கை

(இணுவில்)

மருதனார்மடச் சந்தையை அண்டியுள்ள பகுதிகளில். பாதினியம் பூண்டு அதிக அளவில் வளர்ந்து காணப்பட்ட போதிலும் அதனை அழிக்க எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப் படவில்லை.

இந்தப் பகுதிக்கு அண்மையில் ஆலயங்களும் விவசாய நிலங்களும் உள்ளதால் இப் பூண்டை அடியோடு அழிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனப பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-122)

# திருமுறை முற்றோதல் பூர்த்தி வைபவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.9மணி க்கு ஆலய பொதுச்சபைத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பன்னிரு திருமுறை ஓதுதல் ஒழுங்கமைப்பாளர் வே.இரகுநாதன் சிறப்புரையாற்ற,

அருளுரையை ஸ்ரீமத் அ.செல்லத்துரைசாமி நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் திருமுறை பண்ணிசை மணி இசையாசிரியர் வ.பரமசாமி மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் சு.மனோகரன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (க)

# பயனற்ற செயல்களிலிருந்து விடுபட்டால் வாழ்க்கையின் நற்பலனைப்பெறமுடியும்

## பரமபிதா காட்டியபாதை

ஒரு வேலைக்கான நேர்முகப பரீடசைக்குச் சென்றால் தகுதியுள்ளவன் வெளியே நிற்க



தகுதியில் குறைந்தவன் தெரிவு செய்யப்பட்டதை அனேகர் கூறக் கேட்டிருக்கின்றோம். நம்மில் பலர் அதை அனுபவித்திருக்கிறோம், கண்களாலே நாமே கண்டிருக்கின்றோம். தற்கால உலகில இப்படியான நடமுறைகளை நியாயப்படுத்தி பணத்தைக் கையூட்டாகப் பெறுகினறார்கள்.

குற்றவாளிகள் சுதந்திரமாக உலாவவும் குற்றமற்றவர்கள் சிறைகளில வாடவும் நிற்கதியான நிலைகளுக்கு உள்ளாக்கும் தீர்ப்புக்களே உலகத்தின் தீர்ப்புக்கள் ஆனால்'நீங்கள் தந்தையே என அழைதது மன்றாடுபவர் ஆளைப் பார்த்தல்ல. அவரவர் செயல்களின்படியே தீர்ப்பு வழங்குகிறார்' (1 பேதுரு1:17) குற்றம் புரியாதவன் தண்டிக்கபபடுவதில்லை. குற்றம் புரிந்தவனும் மன்னிப்புக் கேட்டால்.மன்னிக்கப்பெறாமல் இல்லை.

### ஏற்புடைய செயல்களே இறை வழி

எமது மூதாதையர்களிடமிருந்து வந்த பயனற்ற செயல்களில் இருந்து நாம் விடுபட வேணடும். இயேசு கிறிஸ்துவின் மாசு மனுவற்ற இரத்தத்தினால் மீட்கபபட்டுள்ள நாம். அந்த இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தான் கடவுள் மீது விசுவாசம் வைத்துள்ளோம. கடவுளைத் தந்தை என்று அழைப்பதற்கு இயேசு கிறிஸ்து வழியாகத் தூய ஆவியானவரே எம்மைச் செல்படுத்துகின்றார்.

மீட்கப்பட்டுள்ள நாம் எமக்குச சொந்தமானவர்கள் அல்ல. கடவுளுக்குச் சொந்தமானவர்கள். எனவே எமது வாழ்வு பொருளற்ற பயனற்ற வாழ்வாக நடைபெறக் கூடாது. இயேசுவின் உயிர்ப்பினாலே மறுவாழ்வைப் பெற்றுள்ள நாம் நிலை வாழ்வுக்கு ஏற்ற செயற்கரிய செயல்களையே செய்ய வேண்டும். ஏமாற்றுப் பேச்சுக்களுக்கும் பித்தலாட்டங்களுக்கும் துணை போகாமல் உறுதியான விசுவாச வாழ்வினால சாட்சியம் பகர வேண்டும்.

### தூயநடத்தைகளே இறை வழி

கடவுள் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை உயிர்ப்பிக்கச் செய்தார் என்றால், நாம் கடவுளை எதிர்நோக்கி இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தார் என்று தூய பேதுரு குறிப்பிடுகின்றார். அறிவுத் தெளிவுடையவர்களாக மனம் செயல் ஆற்றுவதற்குத் தயாராக இருக்கட்டும் என்றும் கூறுகிறார். எமது நடத்தைகள் தூயனவாக அமையும் போதே. நாம் கடவுளின் குரலைக் கேட்க முடியும். எம்மாவுஸ் என்ற பாதை யிலே போய்க்கொண்டிருந்த சீடர்கள் அறிவுத் தெளிவற்றவர் களாகக் காணப்பட்டார்கள். இயேசு அவர்களோடு கூட நடந்து சென்றும் அவர்கள் இயேசுவைக் கண்டு கொள்ள வில்லை. இயேசு உயிரோடு இருந்த போது கூறிய வார்த்தைகளை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ள திராணியற்றவர்களாக இருந்தார்கள். இயேசு அப்பத்தை பிட்டு அவர்களுக்குக் கொடுகதும் போதே அவர்கள் கண்டு கொண்டன என்று லூக்கா நற்செய்தியில் குறிப்பிடப்படுகின்றது.


### உண்மையே இறைவழி


அனைவரும் உண்மை தன் பக்கம் இருக்கவேண்டும் என்று விருமபுவர் உண்மையின் பக்கம் இருக்க விரும்புபவர் யார்? என்று சுவாமி அரவிந்தர் குறிப்பிடுகின்றார். ''உன்னைத் திறந்துவை, இறைவன் உள்ளே நுழைவார் உன்னை மாற்றிக் கொள், உன்னோடு செயறபடுவார்'- அன்னை தெரேசா.

எம் வாழ்வானது மாற்றங்களுக்கு உட்படவேண்டும். உண்மை உள்ளதாக உள்ளும் புறமும் தூய்மையுள்ளதாகக் காட்சி அளிக் வேண்டும். தூய்மையின் இருப்பிடத்திலே இறைவன் குடி கொள்வார். பரிசுத்த பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரைப் போல் மன்னிப் பதிலும் அன்பு காட்டுவதிலும் இயேசுவைப் பிரதிபலிக்கவேணடும். ஒவ்வொரு நாட்டையும் தரிசிக்கும் வேளை அம் மண்ணை முத்தம் செய்து தமது அன்பை வெளிப்படுத்தினார். இயேசு தமது சீடரின் பாதங்களை கழுவத் தமது பணிவைக் காட்டினார். வாழும் போதே சாட்சியம் பகருவதே உண்மையான நற்செய்திப் போதனையாகும். நற்செய்தியை வாழ்வாக்குவோம் செயறபடுவோம். □

**அமல அருள்தாசன்**







கன்னாதிட்டி வீதியில் இல-82 இல் அமைக்கப்பட்டுள்ள பீப்பில்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டெட்டின் யாழ்ப்பாணக்கிளை நேற்றுக் காலை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. பதில் பொது முகாமையாளர் கருணாசேன மற்றும் அசோக் லேடன்ட் கம்பனி லிமிட்டெட்டின் பதில் பொது முகாமையாளர் முத்து சுப்பிரமணியம் ஆகியோர் இதனை வைபவரீதியாக நாடாவெட்டித் திறந்து வைத்தனர்.

இவர்கள் உட்பட விருந்தினர்கள் ஸ்ரான்லிவீதி மக்கள் வங்கிக் கிளையில் இருந்து கன்னாதிட்டி பீப்பில்ஸ் லீசிங் கம்பனி லிமிட் டெட்டுக்கு வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந் நிகழ்வுக் காட்சிகளையும் இதில் கலந்துகொண்ட வர்த்தகப் பிரமுகர்கள், அதிகாரிகள் பீப்பில்ஸ் லீசிங் கம்பனியின் நிறைவேற்று அதிகாரி டி.ரி.குமாரகே ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : தவராசா)

# இராசி பலன்

**08.04.2005**
**(பங்குனி 26, வெள்ளிக்கிழமை)**
**அமாவாசை பின்னிரவு 2.40 மணிவரை**
**உத்தரட்டாதி முற்பகல் 11.30 மணிவரை**
**இராகுகாலம் 10.37 - 12.07 மணிவரை**
**சுபநேரம் 6.07 - 7.37 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், உணர்ச்சி வசப்படுதல். |
| இடபம் | தனவரவு, கீர்த்தி, குடும்பநன்மை, தொழில் முன்னேற்றம். |
| மிதுனம் | நல்ல் வரவேற்பு, முயற்சிகைகூடும், நல்ல வருமானம், தெய்வசிந்தை. |
| கடகம் | செய்தொழில் விருத்தி, நல்லசெய்தி, பிறர் உதவி, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | உறவினர் சந்திப்பு, இடமாற்றம், புதிய திட்டமிடல், சிந்தனை மிகுதி. |
| கன்னி | உடல் நலக்குறைவு, நண்பர் விரோதம், காரிய தடங்கல், முயற்சிதடங்கல். |
| துலாம் | குடும்நலன், நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும், தொழில் நன்மை. |
| விருச்சிகம் | காரியசித்தி, நிலைமாற்றம், உடல் நலம், சத்துருஜெயம். |
| தனுசு | வியாபார நன்மை, தொழில் சிந்தை, புத்திரரால்கவலை, உடல் நலக்குறைவு. |
| மகரம் | பெரியோர் வெறுப்பு, மாதாசுகம், காரிய தாமதம், ஆரோக்கியக் குறைவு. |
| கும்பம் | கூட்டு முயற்சி, பொருள்சேர்க்கை, தேக நலன், போசனசுகம். |
| மீனம் | தனவிரயம், உணர்ச்சி வசப்படுதல், உடல் நலக்குறைவு, முயற்சிதாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

# சாட்சிகள் இல்லாதமையினால் குற்றவாளிகள் பலர் விடுதலை!

(கொழும்பு)

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக கைது செய்யபபடும் சந்தேக நபர்களில் 70 சதவீதமானோருக்கு எதிராக எந்தவித சட்டநடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை காணப்படுவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

• இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு போதியளவு சாட்சிகள் இல்லாத காரணத்தினாலேயே சட்டநடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலைமை காரணமாக பல்வேறு குற்றங்களுடன் தொடர் புடைய நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு குற்றசசெயல்களை மேற்கொள்வதினால் சாட்சிகள் இல்லாது போகின்றன. இதனால குற்றவாளிகள் தப்பிச் செல்லுகின்றனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குற்றசசெயல்களின் தற்போதைய போக்கு என்னும தலைபபி கருத்தரங்கில்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் வருடாந்தம் 60 ஆயிரம் குற்றச்செல்கள் இடமபெறுகின்றன. இதில் அனேகமானவை கப்பம பெறுவது தொடர்பான குற்றச் செயல்களாகும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைஎடுத்தினர் 43வீத மனோரே சிறைச்சாலைகளில் தடுத்த வைக்கப்படுகின்றனர்.

இலங்கையில்பாரிய அளவு கப்பம்பெறும்நடவடிக் கைகள் தற்போது இடம்பெறுகின்றன. இன்றைய கப்பம பெறும் நடவடிக்கைகள் அன்றைய கப்பம் பெறும நடவடிக்கைகள் அன்றைய கொள்ளைகள் என்ப வற்றைக் கணக்கிடுவது கடினம எமக்குக்கிடைத்த சாட்சிகளுக்கு அமைய நாம் மேறகொண்ட விசார ணைகளுக்கு அமைவாக தொலைபேசி களுக்கு ஊடக கப்பம்பெறுகின்றனர். இதனால் குற்றச் செயல்கள் பதியப்படுவதில்லை. (க-8-9)

# 1000 தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

வெகுவிரைவில் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைத்துக் கொள்ளப்பட விருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க ஆயி ரம் தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதேவேளை, மலையக பகுதியில் நிலவும ஆசிரியர் பற்றாக் குறையை நிவிர்த்தி செய்யும் வகையில 3 ஆயிரம் ஆசிரியர் நியமனங்களையும் உடனடியாக வழங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள் ளதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களின் உப தலைவரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப பினருமான எம்.சச்சியானந்தன் தெரிவித்தார்.(ற-9)

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - குறள்

வலம்புரி

# உரிய வழிகாட்டல் மாணவர்களுக்கு தேவை

க.பொ.த சாதாரணதர மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிவிட்டன. பரீட்சை முடிவுகள் குவியலாக அல்லாமல் பரவலாக அமைந்திருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

அதாவது உயர்வான பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

க.பொ.த சாதாரணதர பரீட்சைபெறுபேறுகளில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தரத்தில் எந்தத் துறையை தெரிவு செய்வது என பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் என்ற உயர்தர கற்கை பிரிவில் எந்தத்துறையை தெரிவு செய்வதென்பதில் மாணவர்கள் குழப்பமடைகின்றனர்.

பொதுவாக சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் தமது உயர்தர கற்கை பிரிவை பின்வரும் அடிப்படையில் தெரிவுசெய்து கொள்கின்றனர்.

- பெற்றுக்கொண்ட பரீட்சைப்பெறுபேறு
- பாடத்துறை சார்கௌரவம்.
- தனது சொந்தவிருப்பம்.
- பெற்றோரின் விருப்பம்.
- தனதுசகநண்பர்கள் தெரிவுசெய்கின்ற துறை.
- தான்கற்கும் பாடசாலையில் இருக்கக்கூடிய துறைகள்.
- தனது நம்பிக்கைக்குரிய ஆசிரியர் கூறுகின்ற துறை.

இவ்விதம் உயர்தரக்கற்கைத்துறையை தெரிவு செய்கின்ற மாணவர்கள் தமது தெரிவில் கவனிக்கவேண்டிய முக்கிய விடயத்தை மறந்துவிடுகின்றனர்.

அதாவது எந்தத்துறையை தெரிவுசெய்தால் பல்கலைக்கழக அனுமதியை தன்னால் பெற்றுக் கொள்ள முடியும் அல்லது உயர்ந்த பெறுபேற்றை பெறமுடியும் என்பதை மாணவர்கள் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை .

மாறாக கணிதம், விஞ்ஞானம், படிப்பதால் கௌரவம் ஏற்படும் என்றோ அன்றி பெற்றோர்கள் விரும்புகிறார்கள் என்றோ தமது பாடத்தெரிவை மேற்கொள்ள முற்படுகின்றபோது உயர்தரப் பரீட்சையில் தோல்விகாணவேண்டிய துர்ப்பாக்கி நிலை ஏற்படுகின்றது.

சாதாரணதரப் பரீட்சை முடிவுக்கும் உயர்தர பரீட்சை முடிவுக்கும் இடையில் எந்தவித தொடர்பும் கிடையாது. சாதாரண தரப்பரீட்சையில் உயர்ந்தபெறுபேற்றை பெற்றுவிட்டதற்காக கணிதம் அல்லது விஞ்ஞானம் படிக்கவேண்டும் என்பதில்லை. உயர்ந்த பெறுபேற்றைப்பெற்றமாணவர் தமக்கு இலகுவில் புரியக்கூடிய- மிகவும் விருப்பமான துறையை தெரிவுசெய்வதன் மூலம் அந்தத் துறையில் சாதனை படைக்க முடியும்.

விஞ்ஞானம் படித்தால் டாக்டர் என்றும், கணிதம் படித்தால் என்ஜினியர் என்றும் நினைப்பது தவறு. தெரிவு செய்துகொண்ட துறையில் யார் ஊக்கத்துடன் முயற்சிக்கின்றனரோ அவரேவெற்றியடைவர். இதுவே உண்மை.

கலை, வர்த்தகம் படிப்பது கௌரவத்திற்குரியதல்ல என நினைப்பது அறியாமையின் உச்சம் விஞ்ஞானம் படித்தால் டாக்டர் , கணிதம் படித்தால் என்ஜினியர் என்றால் இந்தநாட்டின் ஜனாதிபதிக்கு நிகராக இருக்கக்கூடிய பிரதமநீதியரசர் என்ற பதவி க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையின் ஊடாக உருவாக்கப்படுவது என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆக, போலிக்கௌரவத்திற்காக பாடத்தெரிவினை மேற்கொள்ளாமல் தனது வலிமையை அறிந்து பாடத்தெரிவை மேற்கொள்வதே உகந்ததாகும் இதற்கு தகுந்த வழிகாட்டல்கள் மிகமிக தேவையானதாகும்.

## இயற்கை அனர்த்தங்களைத் தவிர்க்கும் வகையிலான

# தொழில்நுட்பத்தை இலங்கைக்கு வழங்குவதாக ஜனாதிபதியிடம் சீனப் பிரதமர் உறுதிமொழி

(கொழும்பு)

இலங்கையின் சமாதானம் மற்றும் அதன் ஸ்திரத்தன்மை என்பன குறித்து சீன அரசாங்கம் தொடர்ந்தும் தனது கடப்பாட்டினை நிறைவேற்றி வருவதாக சீனப பிரதமர் வென் ஜியா போ தெரிவித்துள்ளார்.



பிராந்திய மற்றும் உலக மயப்படுத்தல் ஆகிய விடயங்களில் சீனா தனது ஒத்துழைப்பினை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க சீனப் பிரதமர் இந்தச் சந்திப்பின் போது இணங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளிடையில் வர்த்தகத்துறை சார்ந்த விடயங்களில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கலைத் துறைக்கு தேசிய மத்திய நிலையமொன்றினை அமைத்துக் கொடுப்பதற்கும் சீனப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எதிர்காலத்தில் நிரந்தர உறவுகளை வைத்துக்கொள்ளும் வகையில் சகல துறை சார்ந்த ஒத்துழைப்பைக் கவனத்தில் கொண்டு செயற்படவுள்ளதாகவும் சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இரண்டு நாடுகளுக்குமிடையில் சமய மற்றும் கலாசார உதவிகளின் மூலம்நவயுகம்ஒன்றினை உருவாக்க முடியும என சீனப்பிர தமரிடம் ஜனாதிபதி தெரிவித்ததாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமி இயற்கை அனர்த்தத்தின போது மனிதாபிமான உதவிகளையும் புனருத்தாரன நடவடிக்கைக்கான உதவிகளையும் சீன அரசாங்கமும் அந்த நாட்டு மக்களும் வழங்கியமைகது ஜனாதிபதி இலங்கை சார்பாக தனது நன்றியை சீனப்பிரதமரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கிய கடன்களுக்கு விடுப்பு வழங்க சீனா இணங்கியுள்ளதுடன்,பல்வேறு கைத்தொழில்,பொருளாதார அபிவிருததிகளுக்கு அந்நாடு வழங்கி வரும் ஒத்துழைப்பு என்பனவும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என மேற்படி சந்திப்பில் சீனப்பிரதமரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ற-4)

# புகைபிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவில் பாராளுமன்றில் சட்டமூலம்

## கொண்டுவரப்படும் என்கிறார் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

புகைபிடித்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்கு துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மதுபான வகைகள் தொடர்பான சட்டமூலம் தயாரித்து முடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார தினத்தின் நிமித்தம் கொழும்பு மகாவலி கேந்திரத்தல் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் இவர் கருத்துத் தெரிவிக்கையில், புகைபிடித்தலின் விளைவுகளையும் பாதிப்புக்களையும் முழு உலகமுமே உணர்ந்திருக்கின்றது.

அதனால் தான் இப் பழக்கவழக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பலவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் உலகளாவிய ரீதியில் இணக்கப்பாடுகளும் எயதப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்துத் தான இச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்து சட்டமாக்குதவதன் மூலம் நாட்டு மக்கள் தான் நன்மை பெறுவர்.

இதேவேளை, மந்த போஷாக்கிலிருந்து மீள்வதற்காக தான அரசாங்கம் திரிபோஷா சத்துணவை இலவசமாக விநியோகித்து வருகிறது. இதனை சொற்ப தொகைப்பணத்திற்கு விற்பனை செய்து விட்டு கசிப்பு அருந்துபவர்களும் எமது நாட்டில் வாழுகின்றனர். எனவே தான் மதுபானம் தொடர்பாகவும் சட்டமூலமொன்றைத் தயாரித்திருக்கிறோம் என்று தொவித்தார். (க-9)

# மாட்டுத் திருட்டை தடுக்குமாறு பாதிப்புற்றோர் கோரிக்கை

(பருத்தித்துறை)

துன்னாலை, வல்லிபுரம், புலோலி பகுதிகளில் உள்ள மாடுகள் அடிக்கடி காணாமல் போவதும் மேய்ச்சலுக்காக செல்லும் மாடுகள் தடம்போட்டு பிடிக்கப்பட்டு இறைச்சிக்காக கொண்டு செல்லப்படுவதையும் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் கூட்டாக இணைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

துன்னாலை கிழக்கு வல்லிபுரம், புலோலி பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் விவசாய கால்நடை வளர்ப்பு முயற்சியில் தமது சீவியத்தை கொண்டு செல்பவர்கள். கடந்த பல வருடங்களாக இராணுவ காவலரண்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் அகப்பட்டு பல மாடுகள் கால்களை இழந்தும் இறந்தும் உள்ளன.

அண்மைகாலமாக மாட்டிறைச்சியின் விலை அதிகரித்துள்ளதால் அப்பகுதியிலுள்ள திருடர்கள் மேய்ச்சலுக்கு வரும் மாடுகளை தடம்போட்டு பிடித்து இறைச்சிக்காக வெட்டி விற்று வருகின்றனர்.

அண்மைக்காலமாக 25 மாடுகள் காணாமல் போயுள்ளன. இவ் திருடர்கள் பசுமாடு, நாம்பன் மாடு, கன்றுகுட்டிகள் என்ற வித்தியாசம் பாராமல் மாடுகளை பிடித்துசெல்கின்றனர்.

வல்லிபுரம் மணல் வெளியில் அதிகளவிலான தடத்தில் சிக்குண்டு தவித்த மாடுகளை மக்கள் மீட்டெடுத்துள்ளார்கள். திருடர்கள் தடத்தை போட்டுவிட்டு சென்று விடுவார்கள். பின் மாலையானதும் அவ்விடத்திற்கு வந்து தடத்தில் அகப்பட்ட மாடுகளை அன்று இரவே இறைச்சியாக்கி அடுத்த நாள் இறைச்சி கடைகளுக்கு சென்று விடுகின்றது. இவ் திருடர்களின் செயலால் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே கள்ள மாடுகளை பிடிப்போரை கண்டுபிடித்து சட்டத்தின் முன்நிறுத்துமாறு வேண்டுகிறோம் என அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-35)

# பாப்பரசருக்கு கிளிநொச்சி வர்த்தக சங்கம் அஞ்சலி

(கிளிநொச்சி)

மறைந்த பாப்பரசருக்கு எமது இதய அஞ்சலிப் பூக்களை அர்ப்பணிக்கிறோம் என கிளிநொச்சி வர்த்தக சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தொிவிக்கப்பட்டுள்ளதாவது, இன, மத, நிற, மொழி பேதங்களைப் பாராது அல்லலுறும் மக்களுக்காக தமது பணிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த பெரும மனிதாின் மறைவுத்துயால் எமது சங்கமும் பங்குகொள்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

உலகத்தில் நலிந்த மக்களுக்காகவும் அடக்கப்படும் இனங்களுக்காகவும் குரல்கொடுத்தவரும் அம்மக்களைக் கண்டு ஆறுதல்படுத்தியவருமாகிய பாப்பரசரின் இழப்பினால் உலக மக்களுடன் சேர்ந்து நாமும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பேருண்மை ஒன்று இரண்டல்ல. அது பிரம்மம், பரமாத்மா, பகவான், கடவுள் என்று பல பெயர் களால் அழைக்கப்படுகிறது. உண்மை உணர்ந் தவர்கள் தங்கள் இயற்கையான சுபாவம், உணர்வுகள் ஆகியவற்றுக்கேற்ப அதற்கொரு பெயர் அளிதது விளக்க முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால அந்த முழுமையான உண்மையை விளக்க யாராலும் முடியவில்லை. அவனை முற்றிலும் உணர்ந்தவர்களால கூட அவன் (கடவுள்) அவனாக இருக்கிறான என்று மட்டுமே கூற முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# சாள்ஸ்-கமிலா திருமணம் ஆரவாரமின்றி நடந்தது

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்ஸிக்கும் அவரது 35வருடக் காதலியான கமிலா பாக்கருக்கும் நேற்றைய தினம் திருமணம் நடைபெற்றது.

நடுத்தர வயதுடையவர்களும் விவாகரத்துச் செய்து கொண்டவர்களுமான இந்த இருவரது திருமணம் ஆரம்பத்தில் இருந்தே பல தடைகளை எதிர்நோக்கி வந்துள்ளது.

வின்சர் கோட்டையில் திருமணம் நடைபெற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் திருமணம் நகரமண்டபத்திலேயே நடை பெற்றது.

இத்திருமணம் நேற்று முன்தினம் நடைபெற்ற திட்டமிடப்பட்டிருந்தபோதும் பாப்பரசரின் இறுதிக் கிரியைகள் காரணமாக அது ஒரு நாள் பின்போடப்பட்டது.

எளிமையான முறையில் நடைபெற்ற இத்திருமணத்தில் எலிசபெத் மகாராணியார் கலந்துகொள்ளவில்லை. இத்திருமணத்திற்கு அரசபரம்பரையில் ஆதரவு தெரிவித்த போதும் மகாராணியார் ஒரு போதும் இதற்கு உடன்படவில்லை. (த-7)

## பாணின் விலை...

தற்போது போதியளவு மா கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்றுமுதல் ஒரு இறாத்தல் பாண் 20 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுமென பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.(த)

## ஜே.வி.பி...

சுகாதார அதிகாரியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட அவர், கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஜயந்த வீரசேகரவுக்கு மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பில் அழைப்பாணை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதனையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-08)

## எஸ்.பி.ஐ.விடுவிக்க...

எஸ்.பியை விடுதலைசெய்யக்கோரி நடைபெறும் போராட்டங்களில் கலந்துகொள்வதில் மக்கள் அதிக ஆர்வம்காட்டாததால் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதா? அல்லது தொப்பென்று கைவிடுவதா என்ற சங்கடநிலை ஐ.தே.கவிற்கு ஏற்பட்டுள்ளது.

எஸ்.பியை விடுதலைசெய்யக்கோரி அண்மையில் அனுராதபுரத்தில் நடந்த சத்தியாக்கிரகம் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை. அத்துடன் மஹிந்த விஜயசேகர எம்.பி ஒழுங்குசெய்த சத்தியாக்கிரகத்திலும் பொதுமக்கள் எதிர்பார்த்தளவில் கலந்துகொள்ளவில்லை. எஸ்.பியின் விடயத்தை பொதுமக்கள் பெரிதாக காதில்போட்டுக் கொண்டதாகவும் தெரியவில்லை. இதனால் ஐ.தே.க உயர்மட்டத்தில் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது.

ஐ.தே.கவின் அரசியல்பீடக் கூட்டத்தில் இந்த விடயம் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறது. எஸ்.பியை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்துவதாயின் ஒழுங்காக நடத்தவேண்டும். அல்லது போராட்டத்தைக் கைவிடவேண்டும். போராட்டத்தை நடத்தும் பொறுப்பை யாரிடமும் கொடுக்காமல் நாமே அதை முன்னின்று நடத்தவேண்டும்.

மேற்படி போராட்டங்களில் மக்கள் எதிர்பார்த்தளவில் கலந்துகொள்ளாததற்கு என்ன காரணமென ராஜித சேனாரட்ன எம்.பி சற்றுக் காரசாரமாக விவாதித்திருக்கிறார்.

இதேவேளை கொழும்பில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டமும் மூச்சிப்பேச்சின்றி கைவிடப்பட்டுள்ளது. மேலும் காலியிலும், மாத்தறையிலும் நடந்த போராட்டங்களிலும் பங்கேற்பாரின்றி சோபையிழந்தது.

இந்நிலையிலேயே எஸ்.பிக்கு ஆதரவான போராட்டங்களை தொடர்ந்து நடத்துவதா? விடுவதா? என்று தீர்மானிக்கவேண்டிய இக்கட்டு ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளை, தன்னை விடுவிப்பதற்கு ஆதரவான செயற்பாடுகளை ஐ.தே.க முன்னெடுக்கவில்லை என்று எஸ்.பி குற்றஞ்சாட்டியிருந்ததாக அண்மையில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

இது ஒருபுறமிருக்க எஸ்.பி பணிந்து வரும் பட்சத்தில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு மூலம் விடுதலைசெய்து அவரை தனது பக்கம் இழுத்துக்கொள்வதற்கு சுதந்திரக்கட்சியின் ஒருதரப்பினர் முயன்றுவருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

எனினும் ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரும் நிலைக்கு எஸ்.பி இன்னும் வரவில்லை என்றும், ஆனால் எஸ்.பியைப் பயன்படுத்தி அரசுக்கு எதிராக ஐ.தே.க மேற்கொள்ளும் பிரசார யுத்திகளை முறியடிக்க எஸ்.பியை மீண்டும் சுதந்திரக்கட்சிக்கு இழுப்பதே தற்போதைய தேவையென கட்சியின் உயர்வட்டாரங்கள் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (த)

## இராணுவச்...

பகல் 11 மணியவில் இடம்பெற்றது.

மூதூர் 4 ஆம் கட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த சந்திரசிறி வர்த்தன என்ற சிப்பாயே புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்தார்.

இவரின் கைது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-08)


பௌதிகவியல் - இணைந்த கணிதம்

பல வருடம் அனுபவம்பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் 20 வருட வினாத்தாள் உட்பட பயிற்சிகளும் செய்யப்படும்.

2000 இற்கு மேலதிகமான M.C.Q விடைகளுடன் வழங்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும். T.P Number: 077 - 6648751

R.பாலசுப்பிரமணியம்

B.Sc(cey)Dip.in.Ed

17/1பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

(9519)



குளிரூட்டப்பட்ட

நாதன்ஸ் சினிமா

யாழ்ப்பாணம்



the care taker

கா.நேரம்: 10.30, 02.30, 06.30, 09.30 (பு.நே)

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



நிறைஞ்சனாஸ்

சங்கானை

விஜய், ரவிகிருஷ்ணா, நதீஷா நடித்த



கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)



KINGS ELECTRONICS

புத்தாண்டு மலிவு விற்பனை

ஓடியோ CD - 75/= ,125/=, 140/=

வீடியோ CD - 75/=, 125/=, 150/=

( Stock Clearance Sale )

T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், DVD டெக், Audio Deck, Empty Cds, Fan, Rice Cooker, Gas Cooker,மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

No 64, Stanley Road, Jaffna

சன் T.V

பொதிகை

BBC World

DD Sports

(35 Channels)

EUROSTAR DISK, EUROLINE LNBF, EUROLINE RECEIVER ( Made In Korea )

12750/=




கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

எமது நிறுவனத்திற்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.

இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



மனோகரா

மூன்றாவது வெற்றி வாரம் யாழ்ப்பாணம்

பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் நடித்த

கண்ணாடிப் பூக்கள்

காநேரம்: 10.30, 2.30,

06.04.2005 முதல், இரவு 6.30,9.30 இற்கு

தனுஷ், ஸ்ரீதேவி நடித்த

தேவதையை கண்டேன்



யாழ் கொழும்பு



EXPOAIR

எக்ஸ்போ ஏயார்

யாழ் கொழும்பு



EXPOAIR

your friend in the skies...

தினசரி விமான சேவை

T.P: 021 222 3891/6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



10500/=

புதுவருடத்தினை முன்னிட்டு

அதிரடி விலைக்கழிவில்



13500/=

மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்

◈ உத்தரவாதம் உண்டு ◈ உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

தொடர்புகளுக்கு

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

OFFICE: 185, 1 ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

SHOP: 205/01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இச்சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டுமே

Tel/Fax: 021 - 222 - 7070
Mobile 0712 - 399220, 0714 - 182500, 0714 - 182501

கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்துக் கொடுக்கப்படும்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.